திசம்பர் - 2014

திருவள்ளுவர் ஆண்டு 2045

# செந்தமிழ்

தொகுதி : 59
பகுதி : 02

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா. குமரன் சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந. சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச. மாரியப்ப முரளி M.A., B.L., | செயலாளர் |
| திருமதி. இராணி ந. இலட்சுமி குமரன் சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு. அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா. சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ. சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ. சந்திரசேகரன் | உறுப்பினர் |

# செந்தமிழ்

( தோற்றம் 1903 )


தொகுதி : 59

பகுதி : 02

திசம்பர் : 2014

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045




வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 100 | ரூ. | 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. | 1000 | ரூ. | 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5000 | ரூ. | 10,000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. | 10 | | |


செயலாளர்

**ச. மாரியப்ப முரளி,** எம்.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,மதுரை.

பதிப்பாசிரியர்

**இரா. சதாசிவம்**

மதுரைத் தமிழ்ச்சங்கம்,மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| புறநானூறு காட்டும் வாழ்வியல் அற விழுமியங்கள் | முனைவர் தி. முருகரத்னம் | 6 |
| கிரேக்கமும் தமிழும் | பேராசிரியர். இரா. சதாசிவம் | 25 |
| திருக்குறளில் காணும் தொடரியற் புதுமைகள் | முனைவர் பொற்கோ | 35 |
| திருவள்ளுவமும் மேலாண்மைக் கோட்பாடுகளும் | பேராசிரியர். டாக்டர். கா. அரங்கசாமி | 40 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

"புறநானூறு காட்டும் அறவிழுமியங்கள்" என்ற தலைப்பில் பேராசிரியர் தி. முருகரத்தனம் அவர்கள் கட்டுரை வரைந்துள்ளார்கள். உலக வரலாற்றின் பக்கங்களை உற்றுப் பார்த்தால் வன்முறையும் போரும் அதற்குரிய தயாரிப்புகளும் இடையின்றி நடந்துகொண்டிருப்பதை அறியலாம். ஆனால் பழந்தமிழ் மக்கள் போரும் வன்முறையும் வழக்கில் இருந்த காலத்தில் அறமும் அதன்விழுப்பமும் குறித்து ஆழமும் பரப்பும் கொண்ட சிந்தனையும் செயலும் உடையர்களாக வாழ்ந்திருப்பது புறநானூற்றுப் பாடல்கள் வாயிலாக அறியமுடிகிறது.

சமயங்கள் இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் என்னும் வழக்குடையது. ஆனால் புறநானூறு அதனை அறவிலை வாணிகம் என்கிறது. மற்றொரு பாடல், "பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே" என சக மனிதன்மேல் உள்ள "பரிவுடைப்பேரார்வம்" வெளிப்படுகிறது. அதுவே ஒளியாக வாழ்க்கைப் பயணத்திற்கு வழியாகிறது.

இவ்வாறு புறம் மாற்றுச் சிந்தனையை மறுத்து நிற்பதை ஆசிரியர் விளக்கும் போக்கு ஆய்வுக்குரியதாகும். மறவர் ஊழி என்ற தலைப்பில் ஆசிரியர்" மறப் பண்பாட்டு ஊழி" என ஆய்வாளர்கள் விளக்குவதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறார். கிரேக்க நாகரிகம் என்பது நடுநிலப்பகுதியில் பனனெடுங்காலத்திற்கு முன்பே தோன்றி வேரூன்றி இருந்தது. கிரேக்கம் என்பது பழைய தமிழகத்தில் பல்வேறு குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தது போல கிரேக்கமும் பல்வேறு சிறுகுறு நாடுகளாக அமைந்திருந்தன.கோமர் போன்ற பெருங்கவிஞர்கள் கிரேக்க மக்கள் போற்றும் மாவீரர்களைக் காப்பியமாக்கியுள்ளனர். காப்பியப் பொருளாகக் கோமர் வீரத்தையும் ஈரத்தையும் படைக்கின்றார். கிரேக்கத்திலும் சிறுபாடல் தொகுப்பு புறம் போன்று அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் பழைய நாகரிகத்தில் போர்க்காட்சிகள் படைக்கப்படுவதைக் காணலாம்.நடுநிலக் கடற்பகுதி மக்களோடு தமிழ் மக்களுக்கு அக்காலத்தில் இருந்த தொடர்பு ஆராய்ச்சிக்குரியதாகும்.

மண்ணகப் பண்பாடும் மாற்றகப் பண்பாடும் என்ற தலைப்பில் தமிழருக்குரிய பண்பாட்டையும் பிறபண்பாட்டின் தாக்கத்தையும் ஆய்வுக்கு எடுத்துள்ளார். பழஞ்செவ்வியல் தமிழ்க் காலத்திலேயே புறப்பண்பாடு தமிழகத்தில் நுழைந்திருப்பதை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

உலகம் முழுவதும் சமயமும் சமயம் சார்ந்த இலக்கியங்களும், பொழுது போக்குக் கலைவடிவங்களும் முதன்மை பெற்றிருந்த காலத்தில் புறநானூறு சமயம் கடந்த மானிட வாழ்க்கையின் இன்றியமையாத மெய்ம்மைகளை இலக்கியமாகப் படைத்துள்ளமை புறநாற்றுப் பாடல்களால் விளங்கும் என அமெரிக்க நாட்டு அறிஞர் ஜார்ஜ் ஹார்ட் என்பார் தன்னுடைய புறநானூற்று முன்னுரையில் விளக்கி இருப்பது உளம் கொள்ளத்தக்கதாகும்.

பேராசிரியருடைய இக்கட்டுரை புறநானூற்று ஆராய்ச்சி மேலும் சிந்திப்பதற்குரிய பல்வேறு ஆராய்ச்சிக்குரிய பல செய்திகளை வெளிப்படுத்துகிறது. ஆசிரியர் மாணவர்கள் விரிவாக சிந்திப்பதற்கும் இது குறித்த பிற செய்திகளைத்தேடுவதற்கும் இக்கட்டுரை இடமளிக்கிறது. ஆராய்ச்சி மாணவர்கள் படித்துப் பயன்பெற வேண்டிய இன்றியமையாத கட்டுரையாகும். பேராசிரியர்கள் தங்களுடைய ஆய்வுக் கட்டுரைகளை தமிழ்ச்சங்க நூற்றாண்டு மலருக்கு அளித்துள்ளனர். அவை வாசகர்களைச் சென்று அடைய வேண்டும் என்பதால் அவற்றைச் செந்தமிழ் இதழில் வெளியிடுகிறோம்.

- ஆசிரியர் -

# புறநானூறு காட்டும் வாழ்வியல் அற விழுமியங்கள்

முனைவர் தி. முருகரத்னம்
மதுரை.

**விழுமியம் : விளக்கம் :**

ஒரு பண்பாட்டினர், தனி மாந்தனும், குடும்பமும், சமூகமும் மேற்கொள்ள வேண்டிய ஒழுகலாறுகளை அறம் அல்லது அற ஒழுக்கம் அல்லது நீதிநெறிகள் என வகுத்துக் கொள்வர். இவை சமூகத்தில் அமைதி, நிறைவு, இன்பம் ஆகியவை நிலைபெறத் துணையாகின்றன. (இவ் அற ஒழுக்கத்தை ஆங்கிலத்தில் Ethics எனக் குறிப்பிடுவர்.) இவ் ஒழுகலாறுகளுள் நாள்தோறும், காலந்தோறும், காலங்கடந்தும் மேற்கொள்ளும் ஒழுக்கங்களும் சில, பல உண்டு. இவற்றின் தகுதிக்கும், பயனுக்கும் ஏற்ப இவை சமூகத்தில் போற்றப்படுகின்றன. இவ்வாறு போற்றப்படுபவை விழுமியம் என வழங்கப்படும். ஆங்கிலத்தில் Value எனப்படும். ஒரு சில ஒழுக்கங்கள் முடிவான இறுதி எனக் கருதத்தக்க வாழ்வின் “குறிக்கோள் இறுதி விழுமியங்கள்” (Ultimate Values) எனப்படும். பண்டுதொட்டு விளங்கிவரும் பல பண்பாடுகளில் இத்தகைய இறுதி விழுமியங்களைக் காணலாம். தமிழ்ப் பண்பாட்டிலும் இவை பல உண்டு.

(‘விழுமியம்’ விழுப்பம் என்னும் சொல்லின் வேறு வடிவம். ‘விழுமியம்’ (புறம் 78.5) தன்மைப் பன்மையாக வழங்கப்பட்டுள்ளது. இங்கு ‘விழுமியம்’ அஃறிணைப் படர்க்கைப் பெயராக வழங்கப்படுகிறது.)

**ஈகை**

புறநானூற்றின்வழிப் பரவலாகப் பேசப்பட்டு அறியலாகும் ஓர் அறம் “ஈகை” யாகும். இவ்ஈகை, ‘ஈதல்’எனவும், ‘கொடை’ எனவும், ‘விருந்து புரந்தருதல்’ எனவும், வள்ளன்மை, எனவும், ‘வண்மை’ எனவும், ‘பரிசு’, ‘பரிசில்’ எனவும் பல பொருட்கோளால் வழங்கப்படுகிறது. ‘செல்வத்துப் பயனே ஈதல்’ (பு: 189:7) என்னும் தொடர் ஈகையின் முடிந்த முடிவான தேவையை எடுத்து முழங்குகிறது. இந்தக் கருத்தியலின் தோற்றம் ஓர் அரிய அடிப்படை உண்மைக் கோளைக் கொண்டுள்ளதை இந் நக்கீரர் பாடல் விளக்குகிறது. வேந்தர்க்கும் வேடர்க்கும் உண்பதும் உடுப்பதும் ஒரு தன்மையவாம். ஆகவே செல்வத்துப் பயனே ஈதலாம்! செல்வத்திற்கு வேறொரு பயனும் இல்லை என்பதை ஏகாரம் விளக்குகிறது.

“தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பன இரண்டே;
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"

இக்கருத்தினை வேறொரு புறப்பாடலும் (134) வற்புறுத்துகிறது.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்
பிறரும் சான்றோர் சென்ற நெறி என
ஆண்டுப் பட்டன்று அவன்கை வண்மையே"

ஈகை, சான்றோர் நெறி; தமிழர் நெறி.

'எத்துணை ஆயினும் ஈத்தல் நன்று' (பு.141:13)

எனப் பரணர் அறைகின்றார். ஈத்தல் இறுதி விழுமியம் போன்று இங்குப் பேசப்படுகிறது. இதற்கான பின்னணி வைப்பு இதனைத் தெளிவுபடுத்துகிறது.

'மறுமை நோக்கின்றே அன்றே;
பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே' (பு 141: 14,15)

'மறுமை இன்பம்' என்னும் குறிக்கோளையும் கடந்து வையகத்து வறுமையைப் போக்கும் தேவையைச் சுட்டி 'வண்மை' என்னும் விழுமியத்தைப் பரணர் உயர்த்திப் பிடிக்கிறார். மறுமை இன்பம் நோக்கித் 'தான தருமங்கள்' செய்வதுண்டு. ஆனால் வறுமை நோக்கி ஈதல் என்பது மேல்மேல் உயர்ந்தது.

புறப்பாடல் (141) பேகனைப் பற்றிப் பரணர் பாடியது. ஈகைக்குப் பேர் (=புகழ்) போனவன் பேகன் அல்லவா! அவனது ஈகை, ஈத்தலில் உச்சம் கண்டது. 'படாஅம் மஞ்ஞைக்குஈத்த எம்கோ' (பு.141.11) முகிலைக் கண்டு மயில் ஆடுகிறது. அது நடுங்குகிறது என இரக்கங் கொண்டு அதற்குப் போர்வை கொடுக்கின்றான் பேகன். ஈகையின் உச்சம் இது. ஆனாலும் அறியாமை - மடமை-தானே இச்செயல்! இதனைக் 'கொடைமடம்' என வையகம் வாழ்த்துகிறது.

முல்லைக்குத் தேர் ஈந்த பாரியின் செயல் மேலும் ஒருகொடைமடம் அல்லவா! உண்மையோ பொய்யோ! அறிவோ மடமையோ! ஈகை என்னும் விழுமியத்தை விளக்கும் கற்பனைகள் இவை என்றும் கொள்ளலாமே!

'தள்ளாது ஈயும் தகைசால் வண்மை' (பு.158.15) யுடைய வள்ளல்கள் எழுவரைப் பற்றிப் புறம் பன்னிப் பன்னிப் பேசுகிறது (பு.158). இவ்எழுவரைப் போன்ற மேலும் பலர்; அவர்களுள் ஒருவன் குமணன். பரிசில் வழங்க இயலா நிலையில் தன் தலையையே நல்க முன்வந்தவன் குமணன்!

இவ்வரலாறு 'ஈகை உயிரினும் உயர்ந்தது; ஓம்பத்தக்கது' என எடுத்துப் பேசுகிறது. இந்த வள்ளல்களின் அரண்மனை, வாயில்கள் 'பரிசிலர்க்கு அடையா வாயில்' (பு. 206.5) களாகத் திறந்திருந்தனவாம்; இதில் வியப்பில்லை.

ஆதலால் பழந்தமிழ் வள்ளல்கள் 'பசிப்பிணி மருத்துவர்கள்' எனப் போற்றப்படுகின்றனர். (பு.173.11). பரிசிலர், இரவலரது பசிப்பிணி போக்கப் பாரி வள்ளல் தன் ஆட்சியில் இருந்த முந்நூறு ஊரும் பரிசிலர் பெறத் தந்தான். (பு.1104) சோழன் நலங்கிள்ளி 'ஈ' என இரக்குவராயின். முரசு கெழுதாயத்து அரசினையும் தருவானாம். (பு.73.2,3) சாகா நெல்லிக் கனியை அதியமான் அவ்வைக்கு ஈகை செய்யவில்லையா! (பு.91) கொழுத்தும் வெயில் உடைய கோடையில் மழை பொழிந்தது போன்று 'கவலை நெஞ்சத்து அவலம் தீர' (பு.174.22) ஈகை செய்யும் வள்ளற் பெருமக்கள் தோன்றுவராம்.

கவலை நெஞ்சத்து அவலம் தீர
நீ தோன்றினையே – நிரைத்தார் அண்ணல்!
கல்கண் பொடிய, கானம் வெம்ப,
மல்குநீர் வரைப்பின் கயம்பல உணங்க,
கோடை நீடிய பைதுஅறு காலை,
இருநிலம் நெளிய ஈண்டி
உரும் உரறு கருவிய மழை பொழிந்தாங்கே – (புறம் 174.22–28)

இவ்வாறு அரிய உவமையால் ஈகையின் பயனும் தேவையும் விளக்கப்படுகின்றன. 'மாரி ஈகை' (மழை போன்ற ஈகை) எனப் பிறிது ஒரு புறப்பாடலும் இக்கருத்தைக் குறிப்பிடுகிறது. (பு.158.7)

### ஈகையின் விரிவு

ஈகை என்பது இரப்போர்க்கு - பரிசில் வேண்டுவோர்க்கு - வழங்கி விடுவது என்பது மட்டுமல்ல. அது 'விருந்து புறந்தருதல்', 'விருந்தோம்பல்', 'உடன் உண்ணல்', 'பகுத்துண்டு பல்லுயிர் பாதுகாத்தல்' ஆகும். இக் கருத்தியலை அழகுற விளக்குகிறது இளம்பெருவழுதியின் புறப்பாட்டு (பு.182).

உண்டால் அம்ம, இவ்வுலகம் – இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்வு இலர்,
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கு என முயலா நோன்தாள்
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே
– பொருள்மொழிக் காஞ்சித்துறை (பு.95.5–9)

**உடன் உண்ணலை இப்பாடல் விளக்குகிறது.**

————என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்,
அண்ணல் எம்கோமான் – அவ்வையார்

இப்பகுதியில் இதுவரை புறநானூற்றின் வழியாக எடுத்துக் காட்டப்பட்ட சான்றுகள் எல்லாம் 'ஈகை', 'வள்ளன்மை', 'கொடை' எனப்பட்ட கொள்கை தமிழர் வாழ்வியலில் ஓர் உயரிய விழுமியமாக மட்டும் அல்லாது இறுதி விழுமியமாகவும் போற்றப்பட்டுள்ளதை நன்கு அறிய முடிகிறது.

## மறம்

### மறவர் ஊழி

பழந்தமிழர் நூற்படைப்புக்கள் அகம், புறம் என இரு கூறுகளாக வகுக்கப்பட்டுள்ளன. புறப்பொருளைப் பாடுவதாகப் புறநானூறு அமைந்துள்ளது. இல்லறமும் காதல் வாழ்வும் போகப் பிற புற வாழ்க்கையாகும். ஆடவர் வேளாண்மை, வணிகவழிப் பொருளீட்டல், மன்னர்க்குத் துணையாக ஊர்காவல், நாடுகாவல் மேற்கொள்ளல், பகைவரைப் போரில் வெல்லல், அவர்களிடம் திறை கொள்ளல், மக்களது வறுமை போக்கிப் பசிப்பிணி களைந்து விருந்தோம்பி இரவலர்க்கு ஈகை செய்து, கலைஞரையும் புலவரையும் போற்றிப் புகழ் ஈட்டிப் பேர் நாட்டி மறுமை நோக்கி வாழ்ந்து முடிதல் ஆகிய ஒழுகலாறுகள் புறம் பேசும் பொருள்களாகும். ஆன்நிரை கவர்தலும் மீட்டலுமாகிய வெட்சியும் கரந்தையும், அரண் தாக்கலும் காத்தலும் ஆகிய உழிஞையும் நொச்சியும்,

போர் நிகழ்ச்சிகளில் வீழ்தலும் வெல்லுதலும் ஆகிய தும்பையும் வாகையும், புகழ் வாழ்க்கை பேசும் பாடாணும் எனப் புறப்பொருள் திணைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆதலால் புறப்பொருளில் பெரும்பகுதி பூசலும் போரும் பற்றியவை ஆகும். மன்னரும் மக்களும் வள்ளல்களும் வறியோரும் பாடல்களில் பங்கு பெறுவோர் ஆவர்.

இந்தப் பழந்தமிழ்ப் பண்பாட்டின் காலத்தை 'மறப்பண்பாட்டு ஊழி' (Heroic Age) என ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். (ஈழத்துத் தமிழாய்வறிஞர் க. கைலாசபதி (The Heroic Age) என நூல் வரைந்து இப்பண்பாட்டை விளக்குகிறார்.) இப்பண்பாட்டிற்கு என ஒழுகலாறுகளும் அறங்களும்அறவிழுமியங்களும் இருத்தல் வேண்டும் அல்லவா? இவை பற்றிப் புறநானூறு பேசுவதைக் காணலாம்.

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் பெயரில் அமைந்த வஞ்சினக் காஞ்சித்துறைப் பாட்டு முதலில் கருத்தில் கொள்ள வேண்டியது. (பு.72).

நகுதக் கனரே, நாடு மீக்கூறுநர்;
'இளையன்' இவன்என உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாஅடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படைஅமை மறவரும் உடையம் யாம்' என்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினம்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின் – பொருந்திய
என்நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
'கொடியன்எம் இறை' எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக, என் நிலவரை;
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயாஇன்மை யான் உறவே.

**ஒன்று :** சிறுசொல் சொல்லிச் சினம் கொண்ட பகை வேந்தரைப் போரில் சிதையத் தாக்கி வெல்லுதல்.

**இரண்டு :** உலகில் நிலைபெறும் பலரும் புகழும் சிறப்பினை உடைய புலவர் பெருமக்களால் பாடப்படுதல்.

**மூன்று :** இரப்போர்க்கு ஈதல்

இவை மூன்றும் போற்றத்தக்க அறங்கள்; இவற்றுள் ஒன்றாவது இல்லையாயின் இரண்டாவதும் மூன்றாவதும் தேவை இல்லை. அதாவது போரில் வெல்லுதலே முதன்மையான அறம், விழுமியம் என நெடுஞ்செழியன் அறிவிக்கிறார்.

## 2.2 தாய்மையா? மறமா?

இந்தப் போர் மற அறம் மேலும் பல அறங்களைக் கடந்து உயர்கிறது.

'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படை அழிந்து மாறினன்' என்று பலர் கூற
'மண்டுஅமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலைஅறுத் திடுவென் யான்' எனச் சினைஇ
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள், சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே.

– உவகைக்கலுழ்ச்சி, (பு.278) நச்செள்ளையார் பாடியது.

'ஈன்ற ஞான்றினும் பெரிது உவத்தல்' எங்ஙனம் நிகழ்கிறது? ஒருபுறப்பாட்டு, (295, உவகைக்கலுழ்ச்சி, அவ்வை) இந்த உவகையை ஓடாப்பூட்கைத் தாயின் மெய்ப்பாட்டுவழி விளக்குகிறது. "ஞாட்பின்... அழுவத்துச் சிதைந்து வேறாகிய சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி வாடுமுலை ஊறிச் சுரந்தன". தாய்மை போற்றல் ஓர் உயர்ந்த அறம்தான். ஆனால் அதனினும் உயர்ந்தது போர்மறம் எனப்படுகிறது. தாய்மை, மறத்திற்குத் துணை ஆகிவிடுகிறது.

மேலும் ஒருபுறப்பாட்டு (277) 'முதியோள் சிறுவன்களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை ஈன்ற ஞான்றினும் பெரிதே' என இக்கருத்தியலை வற்புறுத்துகிறது. 'தாயின் ஈன்ற வயிறு புலிசேர்ந்து போகிய கல்அளை' யாம் (பு.86)

## 2.3 குடி காத்தலா? மறமா?

தாய்மை, அறத்தை மட்டும் அல்ல; 'குடிகாத்தல்' என்னும் அறத்தையும் போர்மறம் கடந்து உயர்கிறது:

கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே;
மூதில் மகளிர் ஆதல் தகுமே:

மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே;
நெருநல். உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை விலங்கி, ஆண்டுப் பட்டனனே;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று, மயங்கி,
வேல்கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇ,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமகன் அல்லது இல்லோள்,
'செருமுகம் நோக்கிச் செல்க' என விடுமே.

– மூதில் முல்லை (பு.279) –மாசாத்தியார் பாடியது.

போரில் தந்தை மடிந்தான்; பின் கொழுநன் இறந்தான்; ஒரே மகனையும் செருமுகம் செல்க என்றாள் மூதில் மகள். 'ஆண் மக்கள், போர்க் களத்தில்தான் தோன்றுவராம்' ( பு.86.6 ) ஆண் குழந்தை, ஆடவன் ஆகாது இறந்தால் மறக்குடி என்ன ஆகும்? ஆடவன் நோய்வாய்ப்பட்டு இறந்தால் மறக்குடி என்ன கருதும்? இவை மறக்குடிக்கு இழுக்காம்! விழுப்புண் படாது ஆடவர் மடிந்தால் மறக்குடி பொறுக்காது; ஏற்காது.

"குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்
'ஆள் அன்று' என்று வாளின் தப்பார்"

– முதுமொழிக் காஞ்சி, (பு.74)
– சேரமான் கணைக்கால் இரும்பொறை

நால்மறை முதல்வர் - பார்ப்பார் - மன்னரது நோய்ப்பால் இறந்த யாக்கையைக் கிடப்பி 'மறம் துணையாக மறவர் செல்வுழிச் செல்க' என வாள் போழ்ந்து அடக்கல் உண்டு (பு. 93)

## 2.4. கடமை மறம்நோக்கியே!

தமிழ்ச் சமூகத்தின் அனைவரும் போர்மறத்தை நோக்கியே தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. ஒவ்வொரு வருடைய கடமையையும் இப்புறப் பாடல் பேசுகிறது.

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே;

– மூதில் முல்லை, (பு.312). – பொன்முடியார்.

(சான்றோன் = போர்மறவன். கடன் = அறம்) போர்மறம் தானே இங்கு இறுதி அறம் எனப் பேசப்படுகிறது.

## 2.5. மன்னரும் ஈகையும்

குறுநில மன்னர்க்கும் வள்ளல்களுக்கும் குடிமக்களுக்கும் உரியனவாகச் சில பல ஒழுகலாறுகளை - அறங்களை - புறநானூற்றின் வழி இதுகாறும் காண முடிந்தது. முடிவேந்தர்க்கு உரிய கடமைகள் பல பேசப்படுகின்றன. அவையும் போற்றத்தக்க அறங்கள்.

வேந்தர்க்குக் காவல் – நாடு காவல்,
குடிகாவல் – ஓர் அறம்:
அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரோடு ஒன்றாது, காவல்
குழவி கொள்பவரின், ஓம்புமதி!'

– (பு-5.5,6,7 ) – செவியறிவுறூஉ
– நரிவெரூஉத் தலையார்

வேந்தர்க்கு உரிய அறங்களாக நெடுஞ்செழியன் புறப்பாட்டு (72) போர்மறம், புலவர் போற்றல், ஈகை ஆகியவற்றைத் தந்தன. நலங்கிள்ளி பாட்டு ஒன்று (பு.73) இல்லறக் காதல் ஒழுக்கத்தினை உயர்த்திப் பிடிக்கிறது.

'உள்ளம் எள்ளிய மடவோனை ... வருந்தப்
பொரே என் ஆயின், ...தீதுஇல்
நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்இருங்கூந்தல் மகளிர் ஒல்லா முயக்கிடைக்
குழைக என் தார்'

எனப் பேசுகிறது அந்தப் பாட்டு. ( தார் = மாலை; பொரேன் = போர் செய்யேன் )

மதுரை மருதன் இளநாகனார் நன்மாறனைப் போற்றிப் பாடிய புறப்பாட்டு (55) வேந்தர் மேற்கொள்ளவேண்டிய அறநெறி, கோல் கோடாமை, குணம் கொல்லாமை, ஆண்மை, சாயல் என்னும் மென்மை, வண்மை ஆகிய அறங்கள் எனத் தொகுத்துத் தருகிறது.

கடுஞ்சினத்த கொல்களிறும், கதழ்பரிய கலிமாவும்,
நெடுங்கொடிய நிமிர்தேரும், நெஞ்சுடைய புகல் மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட
அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்;

அதனால், 'நமர்' எனக் கோல் கோடாது,
ஞாயிற்று அன்ன வெந்திறல் ஆண்மையும்,
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்,
வானத் தன்ன வண்மையும், மூன்றும்
உடையை ஆகி ...

## 3. ஈகையும் மறமும் இணைதல்

பல்வேறு அறங்களுள் ஈகையும் மறமும், இருவேறு அறவிழுப்பங்களாகப் பழந்தமிழர் பண்பாட்டில் பரவலாகப் போற்றப்பட்டதை இதுகாறும் புறநானூற்றின் வழி அறிதல் முடிந்தது. இரண்டும் தனித்தனி அறங்கள் மட்டும் அல்ல; அவை இணைந்து ஒன்றுடன் மற்றது உறவுடையதாகத் தெரிகிறது.

'திருந்துவேல் குமணன் நல்கிய வளன்' - (பு. 163. 9)
".. .. ... .. .. .. வண்மையொடு
பகைமேம் படுக நீஏந்திய வேல் - (பு. 158. 27, 28)
'மாரிஈகை மறப்போர் மலையன்' - (பு-158.7)

– குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

"படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்,
'எத்துணையாயினும் ஈத்தல் நன்று' என" (பு.141.11,12,13)

இவை போன்ற பாடல்களில் வேற்படை, மறப்போர், யானைப்படை, மான் ( குதிரைப் படை ) ஆகியவை ஈகையுடன் இணைத்துப் பாடப்படுவதைக் காணலாம். ஆதலால் இவை இரண்டுமே ஒருங்கு இணைத்துப் போற்றத்தக்க அறங்கள் எனக் கொள்ளப்பட்டிருந்தன என்பது புலப்படுகிறது.

## 4. மறம் வழி; ஈகை குறிக்கோள்

ஈகையும் மறமும் உயர்ந்து நிற்கின்றன. இரண்டையும் இறுதி விழுமியங்கள் (End Values / Essential Values) எனக் குறிப்பிடலாம் போலும். இருப்பினும் புறநானூறு, ஈகைக்கு மறம் என்பது துணை அறமாகவும் வழி அறமாகவும் (Instrumental Value) அமைகிறது என்னும் கருத்தியலையும் தாங்கி நிற்கிறது. மறப்போர் வழி ஈகைக்குப் பொருள் தேடப்படுகிறதாம்.

"குன்றம் ... கானம்
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்துஉணக் கிடப்பினும் கிடக்கும்; அஃதான்று

நிறைஅருந் தானை வேந்தரைத்
திறை கொண்டு பெயர்க்கும் செம்மலும் உடைத்தே'

இயல்மொழி – (பு.156)
கொண்கானாங்கிழானை மோசிகீரனார் பாடியது

"யாம்தன் இரக்கும் காலை, தான்எம்
உண்ணா மருங்கல் காட்டி, தன்ஊர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்,
திருந்துஇலை நெடுவேல் வடித்திசின் எனவே" –(பு.180–10,11,12,13)

– (ஈந்தூர் கிழான் தோயன் மாறனை மாடலன் மதுரைக் குமரனார் பாடியது)

'புலவர் எல்லாம் நின்நோக் கினரே;
நீயே, மருந்துஇல் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண் டன்ன முன்பொடு
மாற்றுஇரு வேந்தர் மண்நோக் கினையே' – அரசவாகை, (பு.42–21–24)
கிள்ளிவளவனை இடைக்காடனார் பாடியது.

'வேந்து தந்த பணி திறையான்
சேர்ந்தவர் கடும்பு ஆர்த்தும்' – (பு.22,26,27), அரசவாகை
– இரும்பொறையைக் குறுங்கோழியூர்கிழார் பாடியது.

ஈகை, மறம் என்னும் இருவிழுமியங்களுள் மறம் துணையாக்கப்பட்டு ஈகை உயர்ந்து ஓங்குகிறது.

**5. இசை**

ஈகை ஒன்றே இறுதி விழுமியமாக விளங்குவது போலத் தோன்றுகிறது. ஆயினும், மேலும் ஒரு கருத்தியல் தலைதூக்கி நிற்கிறது. ஈகையே பிறிதொரு விழுமியத்திற்குத் துணை வழி ஆகி விடுகிறது என்பதையும் புறம் வழிக் காண முடிகிறது.

'இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுக, நீ ஏந்தி வேலே' (பு.158–27,28)
– குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

'இசை விளங்கு கவிகை நெடியோய்!' – (பு. 102–6)
– பொகுட்டெழினியை அவ்வை பாடியது.

'மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே' – (பு.66–7,8)
– கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக்குயத்தியார் பாடியது

'ஈத்தோன், எந்தை, இசைதனதாக' – (பு.386–9)
– கிள்ளிவளவனைக் கோவூர்கிழார் பாடியது.

'பரந்துபடு நல்லிசை எய்தி' – (பு.213–9)

– கோப்பெருஞ்சோழனை எயிற்றியனார் பாடியது

'ஈத்த நின் புகழ்' – (பு.159–20)

'.....விறற் புகழ்
வகைஇல் விழுத்திணைப் பிறந்த
இசைமேந் தோன்றல்!' – (பு.159–26.28)

– குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடியது.

'........பொறைய!
விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்;
மம்மர் நெஞ்சத்து எம்ம னோர்க்கு ஒருதலை
கைமுற்றல, நின்புகழே, என்றும்.' – (பு.53–5–8)

– இரும்பொறையை இளங்கீரனார் பாடியது.

'....மற்போர் வேந்தர்
தாம் மாய்ந்தனர் .....பொலிக நும் புகழே' – (பு.62–7,8,19)

– கழாத்தலையார் (இசை = புகழ்)

மேற்கண்ட சான்றுகள் இசை எனப்படும் புகழுக்கு, ஈகையும் மறமும் என்னும் விழுமியங்கள் வழியாகி விடுகின்றன என விளக்குகின்றன. ஈகையாலும் மறத்தாலும் புகழ் ஈட்டுதல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. புகழ், உயிருக்கும் மேலாம்: 'புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்'என்கிறது (புறம் 182-5). ஆகவே புகழே தமிழ்ப் பண்பாட்டின் மாந்தர் குறிக்கோள்; இறுதி அற விழுமியம் (Ultimate Value) ஆகும். தான் எதற்கும் துணை-யாகவோ வழியாகவே (Instrumental) இராது தானே இறுதி விழுமியமாக (End Value) அமைவதே இறுதி உயர் விழுமியத்தின் பாங்கு. அந்தத் தகுதியைப் பெற்றதே இசை எனப்படும் புகழ்.

ஈகையும் மறமும் வழிகள் என்பதால் அவற்றுக்கு விழுமியம் ஆகும் தகுதி இல்லை என்பதில்லை. அவை தூண்கள் போன்றவை. அவற்றின் மீது கட்டப்பட்டதே புகழ்! புகழைத் தாங்கி நிற்பன ஈகையும் மறமும் ஆகும். இந்தக் கருத்தியற் பண்பாடே பழந்தமிழர் பண்பாடு எனலாம் எனப் புறம் வழி அறியமுடிகிறது.

## 6. மண்ணகப் பண்பாடும் மாற்றகப் பண்பாடும்

புறநானூறு தமிழர் பண்பாட்டுக்கே உரியவையான கருத்தியல்-களையும் அறங்களையும் மட்டும் கொண்டிருக்கிறது எனக் கொள்ள இயலவில்லை. பிறபண்பாட்டின் தாக்கத்தையும் அதில் காணமுடிகிறது. பழந்தமிழகத்தில் கி.மு.வின் தொடக்கத்திலேயே ஆசீவகம், சமணம்,

பவுத்தம், வைதீக பிராமணீயம், உலகாயதம் ஆகியவற்றின் உறவினையும் தாக்கத்தையும் காணலாம். பழந்தமிழரின் பண்பாட்டை ஆய்வோர் இவ்வரலாற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். தொல் பழந்தமிழக மண்ணகத்திலேயே அம்மண்ணகத்திற்கு ஏற்பத் தோன்றிய பண்பாட்டுக் கூறுகள் இருத்தல் வேண்டும் அல்லவா. இவற்றை ஆய்வறிஞர்கள் பண்பாட்டுக் கூறுகள் (Orthogenetic Cultural Elements) என வகுத்துக் கூறுகின்றனர். காலம் செல்லச்செல்ல அண்டை அயலார் உறவுகள் ஏற்பட அவர்களுடைய பண்பாட்டின் கூறுகள் அகப்பண்பாட்டுக் கூறுகளுடன் உறவாடலாம்; வந்தேறலாம். இவற்றை (அயல்) புறப்பண்-பாட்டுக் கூறுகள் - Heterogenetic Cultural Elements என ஆய்வறிஞர்கள் வகுத்துரைக்கின்றனர். பழஞ்செவ்வியல் தமிழ்க் காலத்திலேயே புறப்பண்பாடுகளின் தாக்கத்தைத் தமிழகத்தில் காணமுடிகிறது. இவ்வாறான இருவேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளையும் நாம் நம் ஆய்வில் பிரித்தறிதல் வேண்டும். கீழ்வருவன இவ்வகையில் கருத்திற் கொள்ளத்தக்கன :

உயிர் என ஒன்று நிலைபேறு உடையது, அழிவில்லாதது. இம்மையொடு மறுமைப் பிறப்புக்கள் பல உண்டு. பரம் பொருள்கள் / கடவுள்கள் உண்டு. உருவ வழிபாடு / கோவில் வழிபாடு தேவை. மண்ணுலகம் (கர்ம பூமி), தேவருலகம் (போகபூமி), நரகஉலகம் உண்டு.

*வீடு (மோட்சம்), நிர்வாணம் மாந்தர் குறிக்கோள் ஆகும்.*

*அறம் பொருள் இன்பம்/ முப்பால்*

*அறம் பொருள் இன்பம் வீடு / நாற்பால் ஆகியவை வாழ்வியற் குறிக்கோள்கள்.*

*நாலாசிரமங்கள் / பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம்,* சந்யாசம் (துறவு) ஆகியவை வாழ்க்கை நிலைகள். வருண சாதி உயர்வு தாழ்வு வேறுபாடுகள் இயற்கை. கரும வினை - ஊழ்க் கொள்கை உண்டு. மந்திர மொழிகள், சாப விளைவு உண்டு. தவ ஆற்றல் யாக வழிபாடு. பாவம் புண்ணியம்; தானம் தருமம், கொல்லாமை, இன்னா செய்யாமை, கள், காமம், பெண்டிரைக் கடிதல்.

இவை போன்ற கருத்தியல்கள் எந்த எந்தப் பண்பாட்னர்க்கு உரியவை? *இவை எக்காலத்தில் தோன்றின? எங்குத் தோன்றின?* இவ்வினாக்களுக்கு விடை காணுதல் வேண்டும். காணப்படும் விடைகளின் பின்புலத்தில்தான் பழந்தமிழ்ப் பண்பாட்டாராய்ச்சி நிகழ்தல்

வேண்டும். புறநானூறு பேசும் அறங்கள், விழுமியங்கள் பற்றிய ஆராய்ச்சியும் இந்தப் பின்புலத்தில்தான் நிகழ்தல் வேண்டும்.

## 7. தேவருலகக் கருத்தியல்

'புறநானூற்றின் வழி அறியலாகும் பழந்தமிழர் பண்பாட்டின் இறுதி விழுமியம் புகழ் ஆகும்' என்னும் கூற்று தடுமாற்றத்துக்கு உள்ளாகும் போலும். புறநானூற்றின் கீழ்க்கண்ட கருத்துக்கள் எண்ணப்பட வேண்டியவை.

'இவண் இசையுடையோர்க்கு அல்லது, அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை'

– (பு.50–14,15 இயல்மொழி)

(சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை முரசு கட்டில் அறியாது ஏறிய மோசிகீரனைத் தவறு செய்யாது. அவன் துயில் எழுந்துணையும் கவரி கொண்டு வீசியானை மோசிகீரனார் பாடியது.)
(உயர்நிலை உலகம் = தேவலோகம்)

............நும் முன்
ஈண்டுச்செய் நல்வினை ஆண்டுச்சென்று உணீஇய
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் – (பு.174:1819,20)

(நும் முன் = உன்மூத்தோன், உணீஇயர் = உண்ணவேண்டி, நல்வினை, மறப்போரும், ஈகையும் ஆகலாம்)

நிலவரை சூட்டிய நீள்நெடுந் தானைப்
புலவர் புகழ்ந்த பொய்யா நல்லிசை
விரிகதிர் ஞாயிறு விசும்பு இவர்ந்தன்ன
சேண்விளங்கு சிறப்பின் செம்பியர் மருகன்
கொடி நுடங்கு யானை நெடுமா வளவன்
தேவருலகம் எய்தினன் – (பு.228: 6–11)

– கிள்ளிவளவனை ஐயூர் முடவனார் பாடியது.

போர் மறமும் புலவர் புகழும் பொய்யா நல்லிசையும் பேசப்படுகின்றன.

மேலோர் உலகம் எய்தினன் ...

.....................................
பகைவர்ப் பிணிக்கும் ஆற்றல், நசைவர்க்கு
அளந்து கொடை அறியா ஈகை
மணிவரை அன்ன மாயோனே – (பு.229.22–27)

– இரும்பொறையைக் கூடலூர் கிழார் பாடியது

போர் மறம், ஈகை பேசப்படுகின்றன.

'..... பழனே
மாசுஇல் மகளிர் மன்றல் நன்றும்
உயர்நிலை உலகத்து நுகர்ப' – (பு.287:10,11,12)

நீண்மொழி–சாத்தந்தையார்

(பழன்=இறப்பின், மன்றல் = மணம், நுகர்ப = நுகர்வர்)

மறப்போர் புரிந்த கொழுநன் உயர்நிலை உலகம் சென்றால் மகளிரும் அங்குச் செல்வர்.

தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும் – (புறம்214:8.9)

– கோப்பெருஞ்சோழன்

உடம்பொடு சென்மார், உயர்ந்தோர் நாட்டே – (பு.362:22), பெருங்காஞ்சி

– சிறு வெண்தேரையார்

யார், எதற்கு என்னும் விளக்கம் பெற இயலவில்லை; பாடல் சிதைந்தது: இப்பாடலில் மட்டுமே வேள்விப்பார்ப்பார் இடம்பெறுகின்றனர்.

சுவர்க்கம் என்னும் கருத்தியல் 'உயர்ந்தோர் உலகம்', 'உயர்நிலை உலகம்', 'தேவர் உலகம்', 'மேலோர் உலகம்', 'அரும்பெறல் உலகம்', 'உயர்ந்தோர் நாடு', ' தொய்யா உலகம்' என்றெல்லாம் புறநானூற்றில் குறிக்கப்படுகின்றன. போரில் மறம் நாட்டி மறைந்தோரும் ஈகை நல்கிப் புகழ் எய்தினோரும் உயர்ந்தோர் உலகம் எய்தலாம் என்னும் கருத்து மேற்கண்ட சான்றுகளால் பெறப்படுகிறது. மறத்தாலும் ஈகையாலும் புகழ் எய்தினோரும் உயர்ந்தோர் உலகம் எய்தலாம் என்னும் கருத்தும் பெறப்படுகிறது.

'மறம், ஈகை, புகழ் ஆகியவற்றில் உயர்ந்தோர் உலகம் பெறலாம்' என்னும் கருத்தியல் ஏற்கப்படுமானால் உயர்ந்தோர் உலகம் செல்லலே இறுதி விழுமியமாகக் கொள்ளப்படும். புகழ் உட்படப் பிற, துணை வழி விழுமியங்களாக அமைந்து விடுகின்றன.

ஆய்வு நிறைவுறவில்லை. உயர்ந்தோர் உலகம் செல்லல் என்னும் கருத்தியல் புறநானூற்றில் அங்கும் இங்குமாக - மேற்போக்காக - பத்து இடங்களுக்குக் குறைவாக - வந்து செல்கிறது. ஆனால் பழந்தமிழ்ப் பண்பாட்டில் போர் மறமும் கொடையும் புகழும் பரவலாகப் பேசப்படுகின்றன.

தேவருலகம் பற்றிய கருத்தியல் ஆரியர் வடபுலம் வந்தபோது. தோற்றுவிக்கப்பட்ட யாக வழிபாட்டினை ஒட்டித் தோன்றியது என்பது வரலாறு. அதாவது இக்கருத்தியல் வைதிக பிராமணிய சமயத்துக்கு

உரியது. அதன் சாயலையே மேற்கண்ட புறநானூற்றுச் சான்றுகள் காட்டுகின்றன. தமிழரின் தாயகப் பண்பாட்டுக்கு உரியதாக அதனை கொள்ள வாய்ப்பில்லை.

## 8. மறுமைப் பயன்

மறுமையின்பம் - அடுத்து வரும் பிறவியில் இன்பம் பெறல் - ஒரு வாழ்வியற் குறிக்கோளாகக் கருதப்படுகிறது. இதற்கு ஈகையும் பிற அறங்களும் - நல்வினைகள் - வழியாக அமையும்; அமைக்கப்படும். இது பொது நம்பிக்கை. ஆனால் ஆய்வள்ளலும், பேகன் வள்ளலும் மறுமையின்பத்தைக் கீழ்த்தள்ளி ஈகைவண்மையை உயர்த்திப் பிடிக்கின்றனர். இத்தமிழரிடத்தில் ஈகை இறுதி விழுமியமாக அமைகிறது.

உயிர் நிலைபேறு உடையதாகிப் பல பிறப்புக்கள் எடுக்கிறது என்னும் கொள்கை தமிழரின் தாய்ப் பண்பாட்டிற்கு உரியதாகக் கொள்ள இயலவில்லை. இக்கொள்கை ஆரியர்க்கு உரியதும் அல்ல; இந்திய மண்ணிற்கு உரியதுதான். ஆயினும் இது எங்கு எப்போது தோன்றிப் பரவியது என்னும் வரலாறு தெளிவுபடவில்லை. பழந்தமிழர் வரலாற்றில் இக்கொள்கை ஒட்டியும் ஒட்டாமலும் இடம் பெற்றதாகவே கொள்ளுதல் வேண்டும். போரும் காதலும் ஈகையும் போன்று இக்கருத்து பழந்தமிழரிடைப் பரவலாக வழங்கக் காணோம்.

## 9. மண்ணுலகில் இசைநட்டு மாய்தல் தலையாயது

புறநானூற்றின்வழிப் பழந்தமிழரின் வாழ்வியல் விழுமியங் களைத் தேடலின் முடிவுதான் என்ன? பல்வேறு கருத்தியல்களின் பூசல்களிடையே ஓரிரு கருத்தியல்கள் மேலோங்கி நிற்கின்றன. கோப்பெருஞ்சோழனின் பொருள்மொழிக் காஞ்சிப் பாட்டு பூசலிடையே பூத்த ஒரு நறும் பூவை எடுத்துக் காட்டுகிறது. வினைக்கொள்கை, முயற்சியின் பயன், தொய்யா உலக நுகர்ச்சி, இம்மை மறுமைப்பயன் ஆகியவற்றை இப்புறப்பாட்டு ஆய்ந்து 'இவற்றுள் எதுவும் உறுதியில்லை' எனக் குறிப்பிட்டு விளக்கிப் 'புகழ் நட்டுத் தூய வாழ்க்கையொடு இம்மண்ணுலகில் மாய்தலே மிகச் சிறப்புடையது' என அந்தப் பாட்டுப் பேசுகிறது. வினைப்பயன்கள், தேவஉலகம், மறுமை வாழ்வு ஆகியவை இயற்கையின் அறிவியலுக்குப் பிடிபடாக் கருத்தியல்கள் தாமே. கோப்பெருஞ்சோழன் தமிழ் மண்ணிலே தோன்றித் தமிழ்ப்பண்பை உண்டு வளர்ந்த மைந்தன் (மாந்தன்) தானே. அவன் பேசுகிறான்:

'செய்குவம் கொல்லோ, நல்வினை', எனவே
ஐயம் அறாஅர், கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே;
யானை வேட்டுவன் யானையும் பெறுமே;
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே.
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசினோர்க்கு
செய்வினை மருங்கின் எய்தல் உண்டு எனின்,
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;
தொய்யா உலகத்து நுகர்ச்சிஇல் எனின்,
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்;
மாறிப் பிறவார் ஆயினும், இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம்இசை நட்டு,
தீதுஇல் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே

– பொருள் மொழிக்காஞ்சி. (பு: 214)
– வடக்கிருந்தான் கோப்பெருஞ்சோழன்

**நல்வினை, ஐயம்; பயன் உறுதி இல்லை. யானை வேட்டுவன் யானை பெறலாம். முயல் வேட்டையில் முயல் பெறாது போகலாம். தேவருலகம் கிட்டலாம்; கிட்டாது போகலாம். இசைநட்டு மாய்க.**

**இக்கோப்பெருஞ்சோழன் நடுகல் ஆயினான். அவனைப் பற்றிப் பொத்தியார் பாடிய பாடல் 221 'கெடுஇல் நல்லிசை சூடி நடுகல் ஆயினன் புரவலன்' என இசைநட்டு மாய்தலை மட்டுமே குறிப்பிடுகிறது. தேவருலகம் பற்றியோ மறுமை வாழ்வு பற்றியோ இங்குப் பேச்சில்லை.**

**பழந்தமிழரின் வாழ்வியல் எண்ணக்கோள் (Life Ideology) தான் என்ன? 'இந்த வையக வாழ்வே வாழத்தக்கது. காதல், மறம், ஈகை, இவற்றின் வழிப் புகழ் ஈட்டி இறுதி எய்தல்' புறம் 24, 56 இவ் எண்ணக்கோளைத் தெளிவாக எடுத்து விளக்குகின்றன.**

கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!
நின்று நிலை இயர் நின் நாள் மீன்; நில்லாது
படாஅச் செலீஇயர் நின் பகைவர் மீனே –
நின்னொடு தொன்று மூத்த உயிரினும், உயிரொடு
நின்று மூத்த யாக்கை அன்ன, நின்
ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த

வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த,
இரவல் மாக்கள் ஈகைநுவல,
ஒண்தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப, மகிழ்சிறந்து,
ஆங்கு இனிது ஒழுகுமதி, பெரும! ஆங்கு அது
வல்லுநர் வாழ்ந்தோர்' என்ப - தொல்லிசை,
மலர்தலை உலகத்துத் தோன்றி,
பலர், செலச் செல்லாது, நின்று விளிந்தோரே.

– பொருள்மொழிக்காஞ்சி, (பு.24: 23–36)
– நெடுஞ்செழியனை மாங்குடிகிழார் பாடியது

உண்டும் தின்றும் இரப்போர்க்கு ஈந்தும்
மகிழ்கம் வம்மோ, மறப் போரோயே

– பெருங்காஞ்சி, (பு,364:7,8)
– கூகைக் கோழியார்

..........................யாங்கும்
அரியவும் உளவோ, நினக்கே? அதனால்
இரவலர்க்கு அருங்கலம் அருகாது ஈயா,
யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி, நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப, மகிழ் சிறந்து,
ஆங்கு இனிது ஒழுகுமதி! – ஓங்குவாள் மாற
அம்கவின் விசும்பின் ஆர்இருள் அகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவும், குடதிசைத்
தண்கதிர் மதியம் போலவும்,
நின்று நிலைஇயர், உலகொடு உடனே!

– பூவை நிலை, (பு.56:15–25)
– நன்மாறனை மருதன் இளநாகனார் பாடியது

(ஈயா = ஈந்து. மடுப்ப = உண்பிக்க. நிலைஇயர் = நிலைபெறுக.
உலகமொடுஉடன் = உலகில் ஒன்றாக)

## 10. தமிழர் சமயம் : வாழ்வு விழைவு

**வையகம் மெய்யகமா? பொய்யகமா? மாயமா? மருளா?**

**இயற்கை எனும் இப்பால் உண்டு; இயற்கை கடந்து அப்பால் உண்டா? ( Super Nature )**

மன்னுயிர் உண்டு; மக்கள் உண்டு. இவை இகம்பொருள்; பரம்பொருள் உண்டா? வையக இயக்கம் பரம்பொருளாலா? (கடவுளாலா?)

உயிர் உண்மையா? நிலைத்ததா? இம்மை மறுமை உம்மை உண்டா?

வையக வாழ்வு இன்பமா? துன்பமா?

இவ்வினாக்களுக்கு விடையும் விளக்கமும் சமயம் ஆகின்றன. ஒரு விடை: வையக வாழ்வை மறுத்துப் பேசுவது (Life Negation); பிறிதொரு விடை: வையக வாழ்வை ஏற்றுப் பேசுவது (Life Affirmation) புறநானூற்றின் தமிழகத்தில் 'வாழ்க்கை விருப்புக்கொள்கை, ஒலிக்கிறது. தமிழகம் பிற பண்பாட்டினரின் வாழ்க்கை மறுப்பொலியைக் கேட்டு எதிரொலிக்கிறது. புறப்பாடல்கள் பல சாக்காட்டுத் துன்பத்தையும் வாழ்க்கை நிலையாமையையும் வறுமைத் துன்பத்தையும் பரவலாகப் பேசுகின்றன. ஆனால் தமிழகம் நம்பிக்கை இழப்பு, தளர்ச்சி, சோர்வு (Pessimism) கொள்ளவில்லை. அது வாழ்க்கையை வெறுத்து ஓடவும் இல்லை; காணாப்பொருளை நாடவும் இல்லை; இன்னாமையில் இனிமை காண விழைகிறது. துன்பத்தை இன்பமாக்க முயல்கிறது; நிலையாமையில் நிற்பதைச் செய்ய எண்ணுகிறது.

ஓர்இல் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப,
புணர்ந்தோர் பூஅணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப,
படைத்தோன் மன்ற, அப் பண்பிலாளன்,
இன்னாது அம்ம, இவ்வுலகம்;
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே

–பெருங்காஞ்சி, (பு.194)
–பக்குடுக்கை நன்கணியார்

நெய்தல்கறங்கல் = துன்பப்பண் ஒலித்தல். தண்முழவின்பாணி = இன்பப்பண் பைதல் உண்கண் பனிவார்பு உறைத்தல் = துன்பக் கண்ணீர் வடித்தல்

கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை இரங்குவிர் மாதோ;
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்

எல்லோரும் உவப்பது; அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே.


—(பு.195:4–9; பொருள் மொழிக் காஞ்சி)—
நரிவெரூஉத்தலையார்

புறநானூறு காட்டும் தமிழ்ப் பண்பாட்டில் சமயம் உண்டா? சமயம் உள்ளதானால் அந்தச் சமயம்தான் என்ன? பரம்பொருட்கடவுளர்கள், ஆன்மாக்கள், பரலோகங்கள், இம்மை, மறுமை, உம்மை,பக்தி, பாவ புண்ணியங்கள், கோவில், வழிபாடு ........இவையுடையவற்றைச் சமயங்கள் (Religions) என்பர். இவை இல்லாத வாழ்வியலைச் சமயச் சார்பின்மை (Secularism) என்பர்.

ஆனால் மேற்கண்டவை இல்லாத பவுத்தம் சமயம் எனப்படுகிறது; அவற்றை மறுக்கும் உலகாயுதம், மெட்டீரியலிசம் (Materialism) சமயமா?' பழந்தமிழ்ப் பண்பாட்டில் மேற்கண்ட கருத்தியல்கள் வளர்ச்சி பெறவில்லை; வாங்கிக் கொள்ளப்படவும் இல்லை. பழந்தமிழ்ப் பண்பாட்டிற்கு என்று வையக வாழ்வு ஏற்புக் கொள்கை உண்டல்லவா! அக்கொள்கையையே அப்பண்பாட்டின் சமயம் எனலாமே!

(சமயம் என்பதற்கான விளக்கம்–இலக்கணம் – என்னவோ அதற்கேற்ப இவை விளக்கப்படலாம்.)

<u>புறநானூற்றின் வழித் தமிழர் விழுமியங்கள் (Values)</u>




புறநானூற்றின் வழித் தமிழர் விழுமியங்கள் (Values)

# கிரேக்கமும் தமிழும்

பேராசிரியர்
இரா. சதாசிவம்
மதுரை.

ஐரோப்பாவில் அறிவார்ந்த பொருள் பற்றிச் சிந்திக்கும்போது கிரேக்கர்கள் அப்பொருள் பற்றி என்ன கருத்துக் கூறி இருக்கிறார்கள் என்று சிந்திப்பது வழக்கம். தமிழர்கள் ஏதேனும் சிந்தித்தால் அது பற்றி பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் என்ன சொல்லப்-பட்டிருக்கிறது என்று ஒரு கேள்வியைக் கேட்பது இயல்பு. சங்க இலக்கியத்தில் அச்செய்தி பதிவு செய்யப்பட்டிருந்தால் அது தமிழ் மக்கள் பண்டு தொட்டுப் பழகிவந்த செய்தி என்று உறுதி செய்வதற்கு இடமுண்டு.

பொதுவாக மேலைநாட்டு அறிஞர்கள் பெரும்பாலும் இந்தியச் சிந்தனை என்றால் அதற்கு அவர்கள் தேடுவது சமஸ்கிருத மொழி நூல்களையே. ஆனால் சமஸ்கிருத மொழி பாலி, பிராகிருதம், தமிழ் போன்ற மொழிகளின் தொகுப்பு என்பர். அறிஞர்கள் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்வதற்குப் பண்டுதொட்டுப் பழகி வந்த மொழிகளை ஒட்டி சமஸ்கிருத மொழியைச் செப்பம் செய்து அதில் தங்கள் கருத்துக்களை வழங்கியுள்ளனர்.

ஆனால் தமிழ், இந்தியாவின் ஒரு பகுதி மக்கள் பன்னெடுங் காலமாகத் தங்கள் தாய்மொழியாகக் கொண்டு வாழ்ந்து வரும் மொழியாகும். இம்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் குறிப்பாகச் சங்க இலக்கியம் தமிழ் மக்களின் வாழ்க்கையையும் அவர்கள் சிந்தனையையும் தமிழ் வழக்கில் படைக்கப்பட்ட தனிச்சிறப்புடைய இலக்கிய வகை எனலாம். அவ்விலக்கியங்களில் காணப்படும் செய்திகள் பன்னெடுங்காலமாக அவர்கள் ஏற்றுக்கொண்ட செய்தியாகும். அவையே சான்றோர்களால் இலக்கியமாகப் படைக்கப்பட்டுள்ளன.

மேலைநாட்டு அறிஞர்கள் இந்திய மரபு என்றால் சமஸ்கிருத மொழியை மேற்கோள் காட்டும் அவர்கள் தமிழ் வழக்கை மேற்கோள் காட்டுவதில்லை. அவர்கள் வடமொழி போலத் தமிழையும் சற்று எண்ணிப் பார்க்கலாம் என்பதற்காகத்தான் இக்கருத்தை முன்மொழிய வேண்டியுள்ளது.

சங்க இலக்கியங்களுக்குப் பின்பு தோன்றிய நூல்கள் வடமொழி நாகரிகத்தோடு நெருங்கிய உறவு ஏற்பட்ட பின்பு தோன்றியதாக இருப்பதால் அவற்றின் புராண இதிகாசக் கோட்பாடுகளை உள்வாங்கி

ஒன்றிய ஐந்திணை மரபு தழுவி வாழ்ந்த பன்னெடுங்காலப் பழைமை உடையதாகும். அதன்கண் கூறப்பட்ட கருத்துக்கள் தமிழர் வாழ்வோடு ஒன்றியதேயாகும். அத்தமிழ் மரபு இந்திய மரபாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க இடமுண்டு.

கல்வியில் சிறந்த காஞ்சி மாநகரம் பிறநாட்டு மாணவர்களையும் அறிஞர்களையும் ஈர்த்திருக்கிறது. வடபுலத்து மாணவர்களும் ஆசிரியர்களும் இங்கு வந்திருந்து பயின்றனர் என்பதில் வியப்பொன்றும் இல்லை. இங்கிருந்து வடமொழியில் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றிருக்க வாய்ப்புண்டு.

இது இவ்வாறிருக்க கிரேக்கர்கள் தமிழர்களோடு நீண்ட நெடுங் காலமாகத் தொடர்பு கொண்டு உறவு கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி நம் இலக்கியங்களில் தெரிகிறது. இது குறித்துப் பேராசிரியர் வையாபுரி பிள்ளை குறிப்பிடும் போது, "தமிழ் மக்கள் வடநாட்டோடு மட்டும் தான் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று சொல்லமுடியாது, பிற நாட்டாரோடும் தொடர்பு கொண்டிருந்தார்கள்". இவ்வகைத் தொடர்பின் அறிகுறியாக அப்பிறநாட்டுச் சொற்களும் தமிழில் புகுந்துதான் இருக்கவேண்டும். ஒரு உதாரணம் தருகிறேன். தமிழில் உள்ள ஓரை என்ற சொல் கிரேக்கச் சொல். இது தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது.

எனவே, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே கிரேக்கர்களோடு தமிழர்களுக்கு மொழி, இலக்கியம், பண்பாட்டு வாழ்க்கை உறவு இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. கிரேக்கர்கள் வாழ்க்கையின் ஒருமை முழுமை குறித்த சிந்தனை முனைப்புடையர்கள். உடல் வாழ்க்கை நலம் (Physical Health), சமுதாய வாழ்க்கை நலம் (Social Virtue), மனத்தளை நீக்கி மெய்மை அளவு (தியானம்) (Meditation) நலம் பெறுதல் என்பன குறித்த கிரேக்கர்களுடைய முப்பெரும் சிந்தனையும் தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்று ஆழமாகச் சிந்திக்கப் பெற்றிருப்பது இக்கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

கிரேக்க மொழியில் "மெடரி" (Mederi) என்று ஒரு வேர்ச்சொல்: இதன் வழியாக மருந்து (Medicine), உள்ளார்ந்த ஒழுக்கம் (Virtue, Moderation) அளவு அல்லது தியானம் (Meditation) என்ற மூன்று சொற்களும் வகுக்கப்படுகிறது. மருந்து என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் நோயின்றி நேர் நிற்கும் நெறியாகும். இப்போது மருந்து என்றால் நோய்க்குக் கொடுக்கும் மருந்தைக் குறிக்கும். பண்டைக்காலத்தில் மருந்து என்றால் நோயின்றி வாழ்தல், நேர் நிற்றல் என்பதாகும். இதனைத் திருக்குறள்

உரையாசிரியர் மணக்குடவர், "மருந்து கொடாமல் நியமத்திலே நடப்பது நெறி" என்றும் மருந்து என்னும் அதிகாரத் தலைப்பை விளக்குவது கிரேக்கச் சிந்தனையோடு ஒப்பிடத்தக்கது.

திருவள்ளுவரும் ஏழு திருக்குறட்பாக்களில் இக்கருத்தை வலியுறுத்துகிறார். அடுத்து உள்ளார்ந்த ஒழுக்கம் என்பது புற ஆச்சாரங்களைக் குறிப்பதல்ல; அக ஒழுக்கத்தை வலியுறுத்துவதாகும். இதற்குத் திருக்குறள் அதிகாரத் தலைப்புக்களே சான்று பகரும். சமஸ்கிருத நூல்கள் தண்டனைச் சட்டங்களை வலியுறுத்தும். தமிழ்த் திருக்குறள் மனம் சார்ந்த ஒழுக்கங்களையே வலியுறுத்துகிறது.

அடுத்து அளவு அல்லது தியானம் என்பது அகமும் புறமும் ஒழுக்கநெறி நிற்றலாகும். இம்மூன்று நெறியும் ஒருங்கிணைந்து சிறப்பது வாழ்க்கை. இதுவே வாழ்க்கையின் முழுமையாகும். உடல்சார்ந்த நலம், சமுதாயம் சார்ந்த ஒழுக்கம், மனம் சார்ந்த அளவு அல்லது தியான அறத்தின் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொள்வது; இம்மூன்றும் சிறக்கும் வாழ்க்கை முழுமை உடையதாகும். இதனைக் கிரேக்கச் சான்றோரும் வலியுறுத்தினர்.

ஆனால் அக்காலத்திலேயே புரோட்டகோரஸ் என்னும் அறிஞர் அறத்தின் இயக்க ஆற்றலை மறுத்து மனிதனே அனைத்துக்கும் எல்லையும் அளவும் என்று கூறினார். உலகத்தை இயக்குவது அறம் என்பதும் அதனை மீறிய உள்மன உளைவு மானிடத்தின் சிதைவை சந்திக்கும் என்பதையும் ஏற்றுக் கொள்ளாத கொள்கையாளர்களும் இருந்தனர்.

ஆனால் உலகத்தை இயக்குவது உள்மன அறத்தின் ஆற்றல்; அதுவே உடல்நலத்திற்கும், சமுதாய ஒழுக்க மேம்பாட்டுக்கும் இன்றியமையாதது; அளவையின் பயனாக மனமும் உடலும் கடந்த அறத்தின் ஆற்றலில் ஒன்றிக் கலந்து துக்கமும், துன்பமும் அற்ற இன்பநிலையில் ஒன்றுவது; இம்மூன்றும் ஒன்றிய வாழ்வு நலத்தை இவ்வுலகிலேயே வாழ்ந்து காட்டுவது முழுமை நெறியாகும். இதனைத் தமிழ் இலக்கியமும் குறிப்பாகத் திருக்குறள் வலியுறுத்துகிறது.

திருக்குறள் மருந்து என்னும் அதிகாரம் நோயற்ற நேர் நிற்கும் நெறியை வலியுறுத்துகிறது என்பதை மேலே குறிப்பிட்டேன்; அது குறித்து பின்வரும் திருக்குறட்பாக்களைச் சிந்திப்பது அவசியம் என நினைக்கிறேன்.

1. மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
   வளிமுதலா எண்ணிய மூன்று. (941)

2. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (942)
3. அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு (943)
4. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து (944)
5. மாறுபாடு இல்லா உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு (945)
6. இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய் (946)
7. தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். (947)

என்பனவாகும்.

முதற்குறளை விளக்கும் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை உரையாசிரியர்கள் கருத்துக்களை மறுத்து, "வளி-காற்று எனப்பொருள். காற்று, நீர், உணவு என்ற மூன்றும் அளவில் மிகாமலும், குறையாமலும் இருப்பின் நோயணுகாது" என விரிவான விளக்கந் தருவார். இதன் மிகுதியே வாதம், பித்தம், சிலேத்துமம் என்பதாகும். இவற்றின் அளவை உள்ளுணர்வால் உணர்தல் நோய் நீக்கம் பெறச் செய்யும்.

இரண்டாவது திருக்குறளில், ஒருவன் முன் உண்டது அற்றபடியைக் குறிகளான் தெளிய அறிந்து பின் உண்ணுமாயின் அவன் யாக்கைக்கு மருந்து என்று வேறு வேண்டாவாம். குறிகளான் அறிதல் உள்ளுணர்வேயாம். குறிகளாவன: யாக்கை நொய்மை, நோக்கின் தூய்மை, கரணங்கள் தத்தம் தொழிற்குரியனவாதல், பசி மிகுதல் என இவை முதலாயின. பிணிகள் யாக்கையவாகலின் யாக்கைக்கு என்றார். உணின் என்பது அதன் அருமை தோன்ற நின்றது என்பர்.

மூன்றாவது திருக்குறளுக்கு உரை எழுதிய காளிங்கர் "ஒருவன் தான் முன்னம் உண்டது வெந்து அற்றால் அவ்வறவு ஓர்ந்து தெளிந்த பின்னர் உண்க; அங்ஙனம் உண்ணவே அதுகொண்டு தன் உடம்பு நிலைதளராமல் உறுதிக்கண் நெடிது கொண்டு செலுத்துவது ஓர் நெறியினைப் பெறலாம்.

காளிங்கரின் ஈற்றுத்தொடர் உற்றுநோக்கத்தக்கது நெடிதுய்ப்பது மட்டுமல்ல உடம்பு நிலைதளராமல் உறுதிக் கண் நெடிது கொண்டு செலுத்துவது ஓர் நெறிக்கு அதாவது அளவு என்னும் தியான நெறிக்கு

இன்றியமையாது வேண்டப்படுவது நோயற்ற உறுதியான உடம்பு என்பது குறிப்பிடத்தக்கது.

நான்காவது திருக்குறள், உணவின் சுவை கருதாது அதன் சத்தையும் அதனால் பெறும் நன்மையையும் உறுதியாகக் கருதி, அறும் அளவு கடைப்பிடித்து, மாறற்றவைகளை ஆய்ந்து உறுதிசெய்து கொண்டு உண்ண வேண்டும் என்பது உள்முகப் பார்வையேயாகும்.

ஐந்தாவது திருக்குறள், இதற்கு உரை எழுதிய பரிதியார் தன் சரீரத்திற்கு மாறுபாடு இல்லாத உண்டியை விரும்பின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு என எழுதுகிறார். துன்பமுறுவது உடம்பே ஆகலின் உயிர்க்கு எனத் திருவள்ளுவர் கூறுவது நோயற்ற உடம்பால் உறுதிப் பொருளை முயன்று அடையமாட்டாமையால் துன்பமுறுவது உயிரேயாதலின் அதன்மேல் வைத்துக் கூறினார் எனப் பரிமேலழகர் விளக்கம் கூறினார்.

இதனை மேலும் விளக்குகின்ற நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் உண்டி + மறுத்தல் எனப்பிரித்து உண்டெனச் சாப்பிடும் ஆசையை விலக்கல் என விளக்கம் தருவார். உணவின்மேல் புலன் இச்சை கருதி நீங்கா ஆசை உடையவர் பலரும் ஆசை அறுக்கமாட்டாது உண்டு நோயுறுவர் என்பது குறிப்பாகும்.

மருந்து ஆறாவது திருக்குறள் உரையில் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையவர்கள், 'உண்டது அறுதற்குமான கழிவு' என்பர். இரைக்குடல் வேறு; மலக்குடல் வேறு, மலக்குடல் கழிவினைக் கழிக்காவிடின் இரைக் குடலிலே செரித்த பொருள் தங்கி நோயையுண்டாக்கும். ஆதலால் கழிந்த அளவு உண்ணுக என்றுரைப்பர்.

மருந்து 7ஆம் திருக்குறள் பரிமேலழகர் உரை, தன்பகுதியும் அதற்கு ஏற்ற உணவும் காலமும் ஆராயாது வேண்டியதோர் உணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுத்தீ அளவன்றி ஒருவன் மிக உண்ணுமாயின் அவன்மாட்டு நோய்கள் எல்லையற வளரும்.

மேலே குறிப்பிட்டுள்ள ஏழு திருக்குறளும் மருந்தின்றி நோயற்று வாழ்தல்; நேரிய முறையில் வாழ்தல் என்பதை விளக்குவதாகும். முழுமை வாழ்வின் மற்றொரு பரிமாணம் அறநோக்கு; அறத்தின் உறுதி, நேரிய நெறியில் உறுதிப்பாடு; சமுதாயத்திற்கும் தனக்கும் உள்ள உறவை நெறிப்படுத்துவதாகும். திருவள்ளுவர் அறத்தை விதிமுகத்தானும் எதிர்மறை முகத்தானும் வலியுறுத்தி சமுதாய மேம்பாட்டுக்கு தனிமனித ஒழுக்கத்தை நெறிப்படுத்தினார்.

அழுக்காறு, அவா, வெகுளி, இகல், அச்சம், பகை, களவு, குற்றம் கூறல், கூடா ஒழுக்கம், உயிர்க்கொலை புரிதல், தீவினை நாட்டம், நேர்மைத் தடுமாற்றம், முறையற்ற வழிகளில் பொருள் குவித்தலில் நாட்டம், பயனிலபாராட்டல், புல்லறிவாண்மை, புறங்கூறல், பேதைமை, பொய்ம்மை, இன்னாச் சொல் ஆகியவற்றின் புகலிடமாக மனிதமனம் இருக்கின்றது, இவையாவும், தனது என்னும் உணர்வு மேலீட்டால் ஏற்படும் மோதலில் வெளிப்படும் எதிர்விளைவுகளாகும். மனத்தின் ஆழத்திலிருக்கும் இவ்வுணர்வுகள் தனது என்னும் தன் விருப்பம் மேலோங்கும் போது வெளிப்படுகிறது. இவற்றின் குற்றங்களை உணர்ந்த விழிப்புள்ள அறிவு அதற்குரிய தெளிவுடன் எதிர்நின்று வெற்றி பெறும். இதனைத் திருவள்ளுவர் அறிவினால் ஆவது என்? இவ்வாறு பல இடங்களில் அறிவு என்பது தன்னலம் விரும்பாத அறிவு நலம் என்பதையும் அதுவே தனக்கும் சமுதாயத்திற்கும் உள்ள நல்லுறவு என்பதையும் தெளிவுபட விளக்குகின்றார்.

குற்றங்களை விழிப்புடன் நீக்கி மனத்துக்கண் மாசின்றி நேர்நிற்கக் கணந்தோறும் ஏதேனும் முயற்சி நமக்குள் நடந்து கொண்டிருக்கிறதா? அந்த முயற்சி அந்தத் தூய வாழ்க்கை தான் நமக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவு. சமுதாய உறவு புறத்தே சிதிலமுற்றுச் சிதைந்து கிடப்பதற்குக் காரணம் நம்முடைய மனச்சிதைவுதானா? புறச்சிதைவா? அகந்துயார்க்கு எச்சம் நன்றாகும்; மனத்தின்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்; பிற அனைத்தும் துக்கம் தரும்; மனித வாழ்க்கையின் கவலையும் துன்பமும் உள்மனத்தின் அளவேயாகும்.

"ஆகுல நீரபிற" என்பதற்கு காளிங்கர் என்னும் உரையாசிரியர் ஒழிந்தன எல்லாம் துக்கத்தன்மை உடைய என்றவாறு என்னும் உரை ஆழமான பொருளுடையது.

மூன்றாவது சொல் : அளவு அல்லது (Measure) தியானம் என்பதாகும். அளவு என்பது புற அலகுகள் அல்ல; அப்பொருள் பிற்காலத்தில் வந்தது. அளவு என்பது அளவற்றது என்ற பொருளில் சமஸ்கிருதத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் வழங்கிப் பிற்காலத்தில் புறஅலகுகளைக் குறித்து ஒப்பீட்டுப் பொருளில் மாற்றம் பெற்றது.

அளவு என்பது தன் இயக்கம் உடைய (Momentum) பேராற்றலாகும். கிரேக்க மொழியில் (Measure) என்றும், சமஸ்கிருத மொழியில் மாத்ரா என்றும் தமிழ் மொழியில் அளவு என்றும் வழங்கப்படும் சொல்லின் நுட்பம் சிந்தனைக்குரியது.

கிரேக்க மொழியில் அச்சொல் Immeasurable என்பதாம். அளப்பரியது எல்லாவற்றையும் உள்ளடக்கியது என்னும் பொருளில் வழங்குகிறது. அளப்பரியது மட்டுமல்ல; இயக்கம் உடையதுமாகும். தன்னியல்பில் இயங்குகிறது. அப்பேராற்றல் அறப்பேறுடையது; அதனை உணர்வதற்கு வாழ்க்கைத் தூய்மையும், மனத்தூய்மையும் நேரிய ஒழுக்கமும், தன்னியல்பாக வாழ்க்கையில் பரிணமிக்க வேண்டும். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் கணந்தோறும் விழிப்புடன் அறநெறியைத் தியானிக்க வேண்டும். இதனை ஆருகதர் தருமத் தியானம் என்பர்.

இது குறித்துத் திருக்குறள் கள்ளாமை என்னும் அதிகாரத்தில் விரிவான குறிப்புள்ளது. தான், தனது என்னும் பிரிவினை உட்பிளவுடைய மனம் உலகம் தன்னில் வேறானது என்னும் வேறுபாட்டு உணர்வால் வாழ்வு நெறியைச் சிதைத்துப் பிரித்து விடுகிறது. தன்னல முனைப்பு இதன் வேர்; அருள் தன்னியல்பில் ஒப்ப நிகழ்கிறது; அதன் பேராற்றல் வாழ்வின் பேரியக்கம்; அதனைத் தடுப்பது தான், தனது என்னும் பிரிப்பு என்பதை அறிந்து அவ்வருளினையே இடைவிடாது தியானித்து வருகின்றனர் மெய்யுணர்வாளர். வள்ளுவர் "அருள்கருதி அன்புடையர் ஆதல்" என்று குறிப்பிடுவது அருளின் ஆற்றல் கருதி புறப்பொருள்களில் மனம் செலுத்தார்; அகத்தே அருள் கருதி அதனை அகமும் புறமும் போற்றுவர் என்பதாகும். பிற உயிர்களிடத்தில் அன்பு பாராட்டுவர்.

"அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்"

என்னும் திருக்குறளுக்கு உரை எழுதுகின்ற பரிமேலழகர், "அளவு" "தீவினைக் குற்ற விளைவுகளைக் கருதி அவற்றைக் கெடுத்தற்கு உபாயமாகிய யோக ஞானங்களையும் அவற்றான் அஃது எய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறு அறிதல். இதனை ஆருகதர் தருமத் தியானம் என்ப என விளக்குகிறார். அதற்கு ஏற்ப ஒழுகுதலாவது அவ்வளக்கப்பட்டனற்றுள் தீயனவற்றின் நீங்கி நல்லனவற்றின் வழி நிற்றல்" என விளக்குகிறார். பருப்பொருள் அளத்தற்குரியது; ஈண்டு அளத்தல் பருப்பொருள் அல்லாத மெய்ப்பொருள்; அஃது அளவற்றது. அதுவே அளவு என்றும் immeasurable தர்மதியானம் என்றும் உணர்தல் வேண்டும். எனவே, அளவு தரும தியானம் எனப் பரிமேலழகர் உறுதி செய்கிறார். அடுத்து,

களவு என்னும் காரறிவாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

இக்குறளில் அளவு என்பது ஆற்றல் என்று தெளிவுபடக் குறிக்கிறார். அவ்வாற்றல் தன்னையும் உலகத்தையும் இயக்குகிறது. "புரிந்தார் - பொருந்தினார்" எனப் பொருளுரைக்கிறார் ஆசிரியர் மணக்குடவர்.

அளவு என்னும் ஆற்றலுடன் ஒன்றிய பின்பு புற உலகத்தின் சிறுமை வாழ்வில் இல்லை. அறியாமையால் நேர்மை தவறிய சிறுநெறி பற்றுதல் எஞ்ஞான்றும் இல்லை; கணந்தோறும் விழிப்புடன் இருந்து அளவென்னும் ஆற்றல் புரிவர்; அதுவே ஆருகதர் போற்றும் தருமத் தியானமாகும்.

ஆசிரியர் திருவள்ளுவர்,

"அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு"

என்கிறார்.

பெரும்பான்மையும் மனமும், மூளையும் வஞ்சனையுடையது தான், தனது என்னும் முனைப்பால் எப்படியாவது காரியத்தை நடத்திவிட வேண்டும் என்னும் உந்துதலால் நேர்நிற்கும் வலிமையறியாது நேர்மை தவறி நடக்கிறது. நேர்மை நெறியே சிறந்தது; அதற்காக எதையும் எதிர் கொள்ளலாம் என்னும் துணிவு பிறப்பதில்லை. அளவு என்னும் தர்மத் தியானத்தின் ஆற்றல் அறிந்தவர் அறத்தையே அகமும் புறமும் போற்றுவர். அவர் நெஞ்சம் வேறு ஒன்றை நாடாது எப்போதும் அறத்தின் கடைப்பிடியில் உறுதியாக நிற்கும்.

அடுத்துத் திருவள்ளுவர்,

"அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்"

இத்திருக்குறளுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள், நேர் ஆகாதன செய்து அவ்விடத்தே கெடுவார் என்றும், தவத்திற்கு ஏலாத காரியஞ் செய்து வீழ்வர் என்றும், தகவு கேடாகிய மிகை நடைகளைச் செய்து அப்பொழுதே கெடுவர் என்றும் பொருள் கண்டனர். ஆனால் 'அளவல்லாத தீய நினைவுகளை நினைத்த பொழுதே கெடுவர்' என்னும் பரிமேலழகருடைய உரை, செயல் வேண்டியதில்லை; நினைப்பு கெடுக்கும் என்பது உள்மனத்தின் கேடு அழிவை உண்டாக்கும் என்னும் விளக்கம் தெளிந்த சிந்தனை ஆக்கம் உடையது. அகமே கெடுக்கும்; புறச்செயல்கள் வேண்டியதில்லை என்பதாம்.

அதனால் அளவு என்பது புற அளவு அல்ல; புறச்செயல்பாடும் அல்ல; அகத்தே நிகழும் உள்மன ஆற்றல்; அதன் சிதைவு தன்னை அழித்துப் பெருந்துன்பத்தை உண்டாக்கும். வாழ்வுக்கும் தாழ்வுக்கும் உள்மன ஆற்றலின் வலிமையும் சிதைவுமே காரணம். இதனை வலியுறுத்துவான்

பரிமேலழகர், "அவ்வளவல்லாத தீயநினைவுகளை நினைத்தபொழுதே கெடுவர்" எனக் குறிப்பிடுவது உள் மனஒழுக்கமும் அதன் இழுக்கமும் வாழ்க்கையை முடிவு செய்கிறது என்பதாம்.

கிரேக்கத்துன்பியல் நாடக இலக்கிய ஆசிரியர்கள், ஒருவனுடைய துன்ப முடிவு, அவனுடைய ஒழுங்கு மீறிய உள்மனச்சிதைவின் விளைவாகவே வடிவமைக்கப்படுவது ஈண்டு சிந்திக்கத்தக்கது. தமிழில் உள்மன அளவு என்பது தியான வாழ்வைக் குறிக்கும் என்பதற்கு பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படை 91-92 அடிகளை உற்றுநோக்கி உணரலாம்.

*"தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடாஅது*
*அதன் பயம் எய்திய அளவை மான"*

என்ற அடிகளில் வேறு மனற்கவற்சி சிறிதுமின்றி மெய்யும் மனமும் கள்ளுண்ட செருக்கால் தன்னியல்பு மறந்து கிடந்தனர் எனத் தவம் செய் மாந்தர் அளவையோடு ஒப்பிடுவது குறிப்பிடத்தக்கதாகும். சைபீரியா பனிப்பாலையில் வாழ்கின்ற சாமன் என்றும் இனக்குழுவினர் தங்களுக்கு உள்மன வளமும் அறிவும் ஓங்கிப் பெருக அமனிடா என்னும் ஒருவகைக் காளான் உண்ட பனிப் பாலைவனத்து வாழ்மான் கூட்டத்தின் சிறுநீரைப் பருகி மெய்மறந்த நிலையை எய்தினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நம்முடைய நாட்டிலும் கூடாநெறி ஒழுகும் தவம் பூண்டவர்கள் கஞ்சா போன்ற போதைப் பொருள்களை குடித்துப் போதையே தவம் எனத் தருக்கித் திரிவது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இதே செய்தி பதஞ்சலி முனிவர் யோகசூத்திரத்திலும் உள்ளது.

சைபீரியாவிலும் தவம் செய் மாக்களுக்கு உவமையாக சைபீரியாவின் சாமன் குறிப்பிடுவது போல தமிழிலும் இங்குள்ள கலைஞர்கள் ஒப்பிடப்படுவது எண்ணிப் பார்க்கத்தக்கது. தமிழில் அளவை என்பது கிரேக்க, லத்தீன் மொழிகளில் மெசரா என்றும் சமஸ்கிருத மொழியில் மாத்ரா என்றும் வழக்கில் பயின்று வந்துள்ளது இவற்றால் விளங்கும்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இதனைக் கவனிக்காது புறக்கணித்திருப்பது ஏன்? அவர் காலத்தில் இந்த அளவு என்னும் தியான நெறி பொதுவழக்கில் இல்லாமல் இருந்திருக்கலாம். இக்காலங்களில் தியான வகுப்புக்கள் நடத்திப் பெரும் பொருள் ஈட்டி வாழ்கிறார்கள். பண்டை நாட்களில் இத்தகைய வழக்கம் இல்லை போலும்.

ஒழுக்கமும் தூய்மையும் கல்வியும் உடையவர்கள் இடைவிடாத விழிப்புணர்ச்சியால் முயன்று பெறும் பேறு தியானநெறியும் அதன் பயனான வாழ்வுமாக இருந்த காலம் சங்ககாலம்; அப்போது இடைத்- தரகர்கள் இல்லை. தியான வகுப்புக்கள் பயன் தருவதில்லை; இந்நெறி மானிட வாழ்வின் மிகச்சிறந்த விழிப்புணர்வில் நேர்மைத்திறம் நின்று; எதையும் இழக்கத் துணிந்து கடைப்பிடிக்க வேண்டிய மெய்ம்மை நெறியாகும்.

அளவு என்பது கள், கஞ்சா முதலான போதைப் பொருள்களாலும் சைபீரியச் சாமான்கள் போல காளான் உண்ட மான்களின் சிறுநீரைப் பருகியும் பெறும் சிறுபொருள் அல்ல. போலியை உண்மையோடு ஒப்பிடும் பழக்கம் மக்களே போல்வர் கயவர் என்னும் கூற்றினால் அறியலாம். கள்ளுண்டவர் போதைக்களிப்பு தியானநெறி நிற்போர் அளவைமான எனக் குறிப்பிடும் பொருநராற்றுப்படைக் கூற்று சங்ககாலத்தில் அளவை நெறி போற்றப்பட்டது என்பதும் அறக்கோட்பாடு வீறுற்று மேலோங்கி நின்றதையும் காட்டுகிறது.

உலகம் முழுவதும் போற்றிய மெய்ப்பொருள் நெறி தமிழகத்தில் சங்க காலத்தில் குறிக்கப்படுவது தமிழர்கள் அறிவும் மெய்ப்பொருளும் அழகுணர்ச்சியும் இளமையும் தெய்வநலமும் சிறக்க வாழ்ந்தவர்கள் என்பதற்குச் சிறந்த சான்றாகும்.

சங்க காலத்து மக்கள் நடுகல் நட்டு பூவும் புகையும் மணப்பொருளும் இட்டு வழிபட்டனர்; கூத்தும் கொண்டாட்டமும் மட்டுமே உடைய புறநெறியே அறிந்தவர்கள் என்பதாக எண்ண வேண்டியதில்லை; உலக வாழ்வின் மிகவுயர்ந்த பயனான அளவு அறிந்து அளவற்ற இயக்கத்தோடு தங்களை இணைத்துக் கொள்ளத் தெரிந்திருந்தார்கள் என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

1. "மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும் துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கு இல்லை" ச.வையாபுரி பிள்ளை *தமிழின் மறுமலர்ச்சி.*
2. Protagoras said : "Man is the measure of all things" *wholeness and the implicate order* David Bohm.
3. Greek Tragedies *generally portrayed* man's suffering as a consequence of his going beyond the proper *measure* of things. Measure was not external standard or unit but deeper *inner measure that it was* inwardly out of harmony, loss its integrity *and break up into* fragments.
4. The Siberian Shamans *drank the urine* of Amanita muscaria - fed reindeers which exhibit appropriate *signs of mushroom* intoxication in order to gain insight and wisdom, probably attributed *to muscimol,* the psychoactive element of amanita muscaria, which *remains active in urine* for up to seven ingestions. Page 826, Mushrooms and *Poisoning* Tima *Journal* of the Indian Medical Association, Volume 109, Number 11, Kolkata, November 2011.

# திருக்குறளில் காணும் தொடரியற் புதுமைகள்

முனைவர் பொற்கோ
சென்னை

திருவள்ளுவப் பெருந்தகை அவர்கள் மிகப் பல வாழ்வியல் உண்மைகளை அழகாக முறைப்படுத்தி எளிய மொழி நடையில எளிய யாப்பில் வழங்கியருப்பது இலக்கிய உலகத்திலேயே ஒரு தனிச் சிறப்புக்குரிய பணி என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை எழ இடமில்லை. மொழிநடையாலும், கூறும் கருத்தாலும் அறிஞர்கள் எல்லோரும் தாம் வாழும் சமுதாயச் சூழலுக்குக் கடடுப்பட்டவர்தாம் என்பது ஆய்வாளர்கள் எல்லோரும் நன்கு நினைவில் கொள்ள வேண்டிய உண்மை. சில அறிஞர்கள் தாம் வாழும் சமுதாயச் சூழலுக்கு முழுமையாகக் கட்டுபட்டவராக இருக்கலாம். வேறு சில அறிஞர்கள் தம் சமகாலச் சமுதாயச் சூழலுக்கு ஓரளவுக்கு மட்டுமே கட்டுப்பட்டவராக இருக்கலாம். தம் சமகாலச் சமுதாயச் சூழலுக்கு அறவே கட்டுப்படாத அறிஞர்கள் யாரும் இதுவரை இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சூழல் வாழ்ந்த ஒருவர் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி எழுதிய நூல் வேறொரு சமுதாயச் சூழலில் வாழும் மக்களுக்கு முழுமையாகப் பொருந்தி வரும் என்று உறுதி இல்லை. அப்படி முழுமையாகப் பொருந்தி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் முறையாகாது. எவ்வளவுக்குப் பொருந்தி வருகிறதோ அவ்வளவுக்கு அது பாராட்டத்ததக்கது.

சமுதாயச் சூழல் மாறுபட, ஒரு சமுதாயம் வாழ்வு பற்றிக் கொண்டிருக்கிற கருத்திலும், மதிப்பிலும் கூட மாற்றங்கள் ஏற்படும். அதே போலக் கலை வெளிப்பாட்டு முறையிலும் மொழிநடையிலும் சுவைப் பாங்கிலும் கூட மாற்றங்கள் ஏற்படும்.

இந்தப் பின்னணியில் இலக்கியங்களை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளும் போது மிகச் சில இலக்கியங்களே நெடுங்கால வாழ்வுக்குரிய நல்ல இலக்கியங்களாகத் தோன்றுகின்றன. அப்படித் தோன்றும் இலக்கியங்களில் திருக்குறள் முதன்மையானதாகக் கருதத்தக்கது. சமுதாய வளர்ச்சியில் ஏற்பட்ட மதிப்பு மாற்றங்களுக்கு ஏற்பத் திருக்குறளில் காணும் சில கருத்துக்கள் கூட இன்றைய சூழலில் பொருந்தாதனவாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட கருத்து ஆராய்ச்சியில் இந்தக் கட்டுரை ஈடுபடவில்லை.

திருவள்ளுவருடைய மொழிநடையில் காணும் சில புதுமைகளை

மட்டுமே இக்கட்டுரை ஆராய்கிறது. புதுமை என்பது குறிப்பிடத்தக்க வேறுபாடு என்ற பொருளில் இங்கே ஆளப்படுகிறது.

திருவள்ளுவருடைய மொழிநடையில் சிறப்பாகச் சில தொடரியல் புதுமைகளை மட்டும் இங்கே ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளுகிறோம்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்." – 1:10

இந்தத் திருக்குறளை உரைநடைப்படுத்தினால் அது, பிறவிப் பெருங்கடல் நீந்துவார்; இறைவன் அடி சேராதார் நீந்தார் என அமையும். ஒரு செய்யுளுக்குப் பொருள் கூறும் போது முதலில் தொடரியல் முறைப்படி அந்தச் செய்யுளை உரைநடைப் படுத்திக் கொள்ள வேண்டும். அப்படி உரைநடைப்படுத்தும் போது சில தொடரியல் விதி முறைகளுக்கு ஏற்ப அந்தச் செய்யுளில் மறைந்து நிற்கும் சொற்களை வருவித்துக் கொள்ளலாம். மறைந்து நிற்கும் வேற்றுமை உருபுகளைப் பொருள் விளக்கத்திற்காக வெளிப்படுத்திக் கொள்வது போலச் செய்யுளில் மறைந்து நிற்கும் சொற்களையும் பொருள் விளக்கத்திற்காக வருவித்துக் கொள்ளுவது நமது உரையாசிரியர்கள் மேற்கொண்ட நெறிமுறைகளில் ஒன்று. மேற்காட்டிய குறளில் இறைவன் அடி சேராதார் நீந்தார் என்ற தொடர் இறைவனடி சேர்ந்தார் நீந்துவர் என்ற பொருளை உணர்த்துவதால் இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்று உரையாசிரியர்கள் உரை எழுதினர். மேற்குறிப்பிட்டது போல் உறழந்து காட்டிப் பேச வேண்டிய சூழலில் ஒரு தொடரில் எழுவாயைக் கரந்து நிற்கச் செய்திருக்கிறார் வள்ளுவர். இத்தகைய சூழலில் எழுவாய் கரந்து நிற்பது தமிழ் இலக்கிய உலகில் பொதுமையான ஒன்று அல்ல. இது ஒரு புதுமை.

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்" (28. 1)

நகுதல் என்ற வினை வள்ளுவர் கால மொழிநடையில் செய்ப்படுபொருளை ஏற்கவல்லதாக இருந்திருக்கிறது. பூதங்கள் ஐந்தும் அகத்தே வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கத்தை நகும் என இந்தக் குறள் உரைத் தொடர் வடிவம் பெறத்தக்கது.

"உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்" (93. 7)

எனச் செயப்பாட்டு வினைத் தொடரில் அமைந்த குறள் மேற்கூறிய குறளின் தொடரமைப்பை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

மேற்கூறிய குறளை உரைநடைப்படுத்தினால் வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என அமைய வேண்டும் என்று கண்டோம். அப்படி உரைநடைப்படுத்தியும் இங்கே தொடர் முழுமை பெறாமல் இருப்பது கருதத்தக்கது. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம். கண்டு பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என்று தொடரை அமைக்கும் போதுதான் தொடர் முழுமை பெறுகிறது. இங்கே கண்டு என்ற வினையெச்சம் வருவிக்கப்பட்டது. தொடரியல் நெறிப்படி இப்படி ஒரு வினையெச்சம் மறைந்து நிற்பது மிகவும் புதுமை. பொதுவாக வினையெச்சங்கள் மறைந்து நிற்பதில்லை. வெளிப்பட்டே நிற்க வேண்டும்.

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல் (28.9)

உரைநடைப்படுத்தும்போது இந்தக் குறள் கணை கொடிது. யாழ்கோடு செவ்விது, ஆங்கன்ன வினைபடு பாலால் கொளல் என அமையும். இதை மேலும் விளக்கமாக்கும் போது கணை செம்மை கொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கன்ன வினைபடு பாலால் ஒருவன் கொள்ளுக என இந்தக் குறள் விரியும். இந்தக் குறளில் யாழ்கோடு செவ்விது என்ற தொடரின் உதவியால் கணைகொடிது என்ற தொடரைக் கணை செம்மை கொடிது என்று விரித்திருக்கிறோம். செம்மை என்ற சொல் இங்கே வருவிக்கப்பட்டது. இந்தச் சூழல் இப்படி வருவிப்பது தமிழ்த் தொடரியலில் ஒரு புதுமையே. இந்தக் குறளில் மேலும் ஆய்விற்குரிய தொடரியல் செய்திகள் உள்ளன. அவற்றையெல்லாம் இங்கே விளக்க முயல்வது பொருந்தாது.

"உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்" (40.5)

இந்தக் குறளை உரைநடையாக்கம் செய்தால் உடையார்முன் இல்லார் போல் ஏக்கற்றுங்கற்றார்; கல்லாதவர் கடையரே என அமையும். மேலும் இதை விளக்கம் செய்தால் கல்லாதவர் கடையர் என்பதற்கு ஏற்பக் கற்றார் தலையாவார் என அமையுமாறு, உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங்கற்றார் தலைமையர்; கல்லாதவர் கடையர் என்று தொடர் விரிவு பெறும். இங்கே தலைமையர். தலையாயவர் அல்லது மேலோர் என்ற சொல் வருவிக்கப்பட்டது. தலையாயவர் கடையர் என்ற சொற்கள் இங்கே பயனிலைகளாக நின்றன. பயனிலையைக் கரந்து மொழிதல் இங்கே நாம் காணும் புதுமை.

நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. (87.4)

இந்தக் குறள் உரைநடையாக்கம் பெறும் போது வெகுளி நீங்கான், *எஞ்ஞான்றும் நிறையிலன், யாங்கணும் யார்க்கும் எளிது என அமையும்.* பொருள் விளக்கம் பெற மேலும் விரித்துரைக்கும்போது இக்குறளில் உரைத்தொடர், ஒருவன் வெகுளி நீங்கான், எஞ்ஞான்றும் நிறையிலன், அவனை வெல்லுதல் யாங்கணும் யார்க்கும் எளிது என்று அமையும். இந்தத் தொடரில் அவனை வெல்லுதல் என்பது வருவித்து உரைக்கப்பட்டது. இந்தச் சூழலில் இவ்வாறு எழுவாயைக் கரந்து மொழிவது தமிழ்த் தொடரியலில் மிகவும் புதுமையானது. அவன் பகை யார்க்கும் எளிது எனக் கொள்ளினும் எழுவாய் கரந்து நிற்றல் காண்க.

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது (87.5)

இந்தக் குறளின் உரைநடையாக்கம் வழிநோக்கான்; வாய்ப்பன செய்யான், பழிநோக்கான் பண்பிலன், பற்றார்க்கு இனிது என அமையும். பொருள் விளக்கத்துக்கு மேலும் தொடரை விரித்துரைக்கும் போது ஒருவன் வழிநோக்கான் வாய்ப்பன செய்யான், பழிநோக்கான், பண்பிலன் அவனுடைய பகை பற்றார்க்கு இனிது என அமையும். இங்கே அவனுடைய பகை என்ற தொடர் இனிது என்ற பயனிலைக்கு எழுவாயாக வருவித்து உரைக்கப்பட்டது. இப்படி இத்தகைய சூழலில் எழுவாய்த் தொடரை வருவித்து உரைப்பது தமிழ்த் தொடரியலுக்கு மிகவும் புதுமையானது.

பகை என்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று (88.1)

இந்தக் குறள் தொடரமைப்பு மிகவும் சிக்கலானது. இதை உரை நடையாக்கம் செய்யும் போது அது பகை என்னும் பண்பிலதனை ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று என அமையும். பண்பில்லாத ஒன்றை ஒருவன் வேண்டற்பாலது அல்லன் என்றிருந்தால் குழப்பம் இல்லை. இந்தச் சிக்கலைப் பரிமேலழகர் மிக நன்றாகக் கவனித்திருக்கிறார். வேண்டற்பாற்று அன்று என்ற பயனிலைக்கு ஏற்ப நீதி நூல் என்று எழுவாயை வருவித்து அவர் உரை கூறுகிறார். அவர் கருத்துப்படி இந்தக் குறளின் உரைத் தொடர்வரி பின்வருமாறு அமையும்.

நீதிநூல் பகை என்னும் பண்பிலதனை ஒருவன் நகையேயும் வேண்டும் பான்மையது அன்று.

இங்கே நீதி நூல் என்ற எழுவாயை வருவித்து உரைத்தது நன்கு கவனிக்கத்தக்கது. இங்கே கரந்து நின்ற எழுவாய் அதுதானா? இப்படி ஐயத்துக்கு உரிய வகையில் வள்ளுவர் எழுவாயைக் கரந்து மொழிந் திருப்பாரா? இவை ஆராயத்தக்கன.

திருவள்ளுவப் பெருந்தகை மிகுந்த புலமை வாய்ந்தவர் என்பதும் அவருடைய எழுத்துக்கள் கருத்துச் செறிவும் சிந்தனைத் தெளிவும் உடையவை என்பதும் எல்லோரும் ஒப்பத்தக்க உண்மைகள். அவருடைய சொல்லாட்சியிலும் தொடரியல் முறையிலும் நாம் காணும் தனித் தன்மைகள் மேலும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராயத்தக்கன. இப்படிப்பட்ட ஆராய்ச்சி திருவள்ளுவரின் திருவுள்ளத்தை உள்ளது உள்ளவாறு புரிந்து கொள்ள உறுதுணையாக அமையும். இத்தகைய ஆய்வுகள் இனித்தான் நிகழவேண்டும்.

## குறிப்புகள் :

1. நான் அவனைப் பார்த்து அவனோடு பேச விரும்புகிறேன் என்ற தொடரில் அவனோடு என்பது கரந்து நின்று அந்தத் தொடர் நான் அவனைப் பார்த்துப் பேச விரும்புகிறேன் என அமையலாம். உருபுகள் மறைந்து நிற்பது பற்றி நம் இலக்கணப் புலவர்கள் ஓரளவுக்கு ஆராய்ந்து விதியமைத்திருக்கிறார்கள். சொற்கள் மறைந்து நிற்பது பற்றி மொழியில் திட்டவட்டமாக அமைந்து கிடக்கும் விதிகளை இனித்தான் ஆராய்ந்து தெளிவாக விளக்க வேண்டும்.

2. பொதுவாக உரையாடலில் எழுவாய் கரந்து நிற்பது இயல்பு. இன்னார் இது செய்வர் ; இன்னார் இது செய்யார் என இரண்டு செய்திகளை உறழ்ந்து காட்டும்போது எழுவாய் மறைந்து நிற்றல் மிகவும் அரிது. மறைந்து நிற்பது இங்கே காணும் புதுமை.

3. யாழ்கோடு என்பதை ஒரு தொகையாகக் கொண்டால் அது செவ்விது என்பதற்கு எழுவாயாகும். அது தொகையாயின் யாழ்க்கோடு என ஒற்று மிக வேண்டும் என எதிர்பார்க்கிறோம். இந்தச் சிக்கல் மேலும் ஆராயத்தக்கது.

4. மொழியில் பயனிலை கரந்து நிற்றல் மிகமிக அரிது. இந்தக் குறளுக்கு வேறு விளக்கம் இருக்குமோ என்று கருதவேண்டியுள்ளது. ஆராய வேண்டும்

# திருவள்ளுவமும் மேலாண்மைக் கோட்பாடுகளும்

பேராசியர்
டாக்டர். கா. அரங்கசாமி
தாராபுரம்.

திருவள்ளுவம் பற்றிய கருத்துரைகளாகப் புலவர் பெருமக்கள் பலர் கூறிய தனிப்பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள், மதுரைத் தமிழ் நாகனார் என்பார் தமது பாடலில் "எல்லாப் பொருளும் இதன்பால் உள. இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை" எனக் குறிப்பிடுகின்றார். வள்ளுவத்தை நன்குணர்ந்து கற்றவர்க்கு இக்கருத்துரை எத்தகைய உண்மையான மதிப்பீடாக அமைந்துள்ளதென்பது நன்கு விளங்கும். இத்தகு சிறப்பிற்குக் காரணம் பிறரெல்லாம் மனிதனுக்குப் புறத்தே உள்ளவைகளைப் பற்றிப் பெரும்பாலும் பேசி நிற்க, வள்ளுவர் மட்டும் மனிதனையே பேசுகின்றார். எனவே மனிதனின் அகஉணர்வு நிலைகளும், அறிவுநிலைகளும் அவற்றைப் பாதிக்கின்ற புறக்காரணிகளும் வள்ளுவத்தின் ஆய்வுப் பொருள்களாகி விடுகின்றன.

கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் மனிதன் பெற்றுள்ள புறவளர்ச்சி அற்புதமானது; அளவிடற்கரியது. மேற்கு நாடுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும், அறிவியலில் ஏற்பட்ட வியத்தகு முன்னேற்றமும் மனித வாழ்வின் பெரும் புறநிலை மாற்றங்களை உருவாக்கிவிட்டன. சமுதாயம், அரசியல், பொருளாதாரம் முதலான பல துறைகளில் உலக மக்கள் பல வகையான சிக்கல்களை ஒருங்கிணைந்து சந்திக்க வேண்டுவதாயிற்று. உலகின் எப்பகுதியில் எவ்விதமான முரண்பாடுகள் தோன்றினாலும் அவை உலகின் பிற பகுதிகளையும் ஏதாவதொருவிதத்தில் பாதிப்பதைக் காண்கிறோம். வாமன னாக இருந்த மனிதன் திரிவிக்கிரமனாக உலகை அளப்பதைக் காணுகின்றோம். தொலைத் தொடர்புத் துறையிலும் இன்று ஏற்பட்டுள்ள வளர்ச்சி உலகையே ஒரு நகரமாக எண்ணுமளவிற்கு மாற்றியமைத்துள்ளது.

இந்நிலையில், பல்வேறு விதமான தொழில்கள் தோன்றித் துறைகள் தோறும் பல்கிப் பெருகுகின்றன. பழங்காலத்தில் சிற்றூர்களிலும் சிறுநகரங்களிலும் முடங்கிக் கிடந்த தொழில்கள் இன்று உலகளாவிய வளர்ச்சியினைப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகப் போர்க்கருவிகள் பண்டைய நாட்களில் சிறுசிறு கொல்லர்களின் உலைக் களங்களில் மனித ஆற்றலை மட்டுமே கொண்டு செய்யப் பெற்றன. ஆனால் இன்று உலகையே நிமிடக் கணக்கில் அழித்து விடக்கூடிய கொடிய ஆயுதங்

களைப் பெரும் தொழிற்சாலைகளில் எந்திர நுட்பங்களோடு, நாடுகள் போட்டி உணர்வோடு செய்து குவிப்பதனையும், வணிக நோக்கோடு அவை விற்கப்படுவதையும் காண்கின்றோம். இவ்வொரு தொழில் மட்டுமல்லாமல் இன்னும் பல தொழில்கள் உலகளாவிய வளர்ச்சியினைப் பெற்றுள்ளன. இத்தகு வளர்ச்சி நிலைக்கேற்ப இவற்றைக் கொண்டு செலுத்தும் மனித ஆளுமையும் பல விதமான தகுதிகளைப் பெற்று உருவாகி நிற்பதனைப் பார்க்கின்றோம்.

பண்டைக் காலங்களில் இயல்துறைக் கல்வியே பலராலும் கற்கப்பட்டது. தொழில் துறை சார்ந்த கல்வி பரம்பரைப் பயிற்சியாகப் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த பல குழுக்களில் பெறுகின்ற அனுபவக் கல்வியாகவே இருந்தது. அஃதாவது தொழிற்கல்வி குலக்கல்வியாகவே இருந்தது. ஆனால் இக்காலத்தில் யார் வேண்டு மானாலும் எத்துறை சார்ந்த தொழிற்கல்வியைப் பெற விரும்பினாலும் பெறுதற்கேற்ற சூழல் அமைந்துள்ளது. அவற்றுக்கான பல்கலைக் கழகங்கள் உருவாகிவிட்டன. மேலும் ஒரு துறை சார்ந்த கல்வியே நுட்ப நோக்கில் பல பகுதிகளாகப் பகுக்கப் பெற்று ஒவ்வொரு பகுதிக்கும் தனித்திறன் பெறுதற்குரிய (Specialization) வாய்ப்பும் வழங்கப் பெறுகின்றது. இவ்வகையில் தொழில் துறை சார்ந்த நுட்பங்கள் மட்டுமன்றி ஒரு தொழிலைச் சிறப்புறக் கொண்டு செலுத்துதற்கு வேண்டிய மேலாண்மையும் (Management) ஒரு கல்வியாகப் பயிலுவதற்குரிய நிலை இன்று உருவாகி உள்ளது. காலத்தின் தேவைக்கேற்ப வளர்ந்துள்ள இப்புதியதுறை பற்றிய சிந்தனைகள் வள்ளுவத்தில் இடம் பெற்றுள்ளனவா? இடம் பெற்றுள்ளனவெனின் எல்லாப் பொருளும் இதன் பாலுள்ள என்ற நாகனாரின் உறுதியான நிலைப்பாடு உயிர்ப்புடையதாகும்.

"Management" என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழில் மேலாண்மை என்ற சொல் வழங்கி வருகின்றது. இச்சொல் ஆங்கிலச் சொல்லைக் காட்டிலும் பொருள் பொதிந்த சொல்லாக விளங்குகின்றது. எச்செயலுக்கும் அல்லது எத்தொழிலுக்கும் மேல் நிலையில் இருந்து அல்லது எத்தொழிலுக்கும் மேல் நிலையில் இருந்து அல்லது அத்தலைமையேற்று அச்செயலை அல்லது அத்தொழிலை மேலாகச் செய்யும் ஆளும் தன்மை என்பது இதன் பொருள்.

செயலும், தொழிலும் இல்லாத மனித வாழ்க்கை எப்போதும் இருந்ததில்லை ! எனில், என்று செயலும், தொழிலும் இருந்தனவோ அன்றே ஆளுமையும் உடன் தோன்றிவிட்டதெனலாம். வரலாற்றுக்

# செந்தமிழ்க் கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி. இராணி ந. இலட்சுமி குமரன் சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச. மாரியப்பமுரளி M.A., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா. சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச. தசரதராமன் B.A., B.L., | உறுப்பினர் |
| திரு. து. மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா. ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ. சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ. பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி. ராஜாராம் B.A., | உறுப்பினர் |
| முனைவர் அ. செல்வமணி | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு. விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி. வேணுகா | உறுப்பினர் |

RNI Regd. No. 5508/57 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.



54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் சு. விஜயன்**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந. இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, INDIA

பெறுநர் / To,

பதிப்பாசிரியர்
பேராசிரியர் **இரா. சதாசிவம்**
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001
அலைபேசி எண். 9487445403

வெளியிடுபவர் : **ச. மாரியப்பமுரளி, M.A.,B.L.** செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343455
அச்சகம் : **ரஹீம் பிரிண்டர்ஸ்,** 67, ஜெய்ஹிந்த்புரம் முதல் தெரு, மதுரை - 11